பக்கங்கள் 17+7

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆவணி 24 திங்கட்கிழமை 09.09.2024 | அதிர்வு 39

## பாக்கு மரத்தில் இருந்து வீழ்ந்து சிறுவன் மரணம்

(ராமு தனராஜா)

பாக்கு மரத்தில் இருந்து தவறி கீழே வீழ்ந்து படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட சிறுவன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

04

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்





# வரிசை யுகம் மீண்டும் வர ஒருபோதும் இடமளியேன்!

## இளைஞர்களின் ஆசைகள் நிறைவேறும் நாட்டை உருவாக்குவதே தனது நோக்கம் என்கிறார் ரணில்

வரிசைகளற்ற மற்றும் இளைஞர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் நாட்டைக் கட்டியெழுப்புவதே தனது நோக்கம் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பத்தரமுல்லை தியத உயன வெளிப்புற அரங்க மண்டபத்தில் நேற்று இரவு நடைபெற்ற Open Mic Night இளைஞர் இசை நிகழ்ச்சியில் கலந்துகொண்டு இளைஞர்களுடன் சிநேகபூர்வமாக உரையாடியபோதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

03

# தென்பகுதி வேட்பாளர்களுக்கு நாம் அளிக்கும் வாக்கு எமது தலையில் நாமே மண் அள்ளிப் போடும் செயல்!

## தமிழ்ப் பொது வேட்பாளர் அரியநேத்திரன் தெரிவிப்பு



(கே.வசந்தன்)

ஜனாதிபதித் தேர்தலில் தென்பகுதி வேட்பாளர்களுக்கு நாம் அளிக்கும் வாக்கு எமது தலையில் மண் அள்ளிப்போடும் செயல் என்று தமிழ்ப் பொது வேட்பாளர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று இரவு தமிழ்ப் பொது வேட்பாளர் அரியநேத்திரனை ஆதரித்து நடைபெற்ற கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

“இன்று பரவலாகப் பேசப்படுகின்ற மூன்று தென்பகுதி ஜனாதிபதி வேட்பாளர்களுக்கும் நாம்

04






# மட்டு. சத்துருக்கொண்டான் படுகொலை நினைவுத்தூபியில் பொலிஸார் அராஜகம்

## நினைவேந்தல் நாளில் குழப்பம் விளைவிப்பு

**(கனகராசா சரவணன்)**

**மட்டக்களப்பு, சத்துருக்கொண்டானில் படுகொலை செய்யப்பட்ட அப்பாவிப் பொதுமக்களுக்காக அமைக்கப்பட்டிருந்த நினைவுத்தூபி புனர்நிர்மாணம் செய்யப்பட்டு அதில் இராணுவத்தால் படுகொலை சய்யப்படவர்கள் என்ற பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டு இன்று பதிக்கப்பட்டது. இதனைப் பொலிஸார் பலவந்தமாகக் கழற்றி எடுத்ததையடுத்து அங்கு பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் பெரும் முறுகல் நிலை ஏற்பட்டது.**

**இதையடுத்து அங்கு மேலதிக பொலிஸாரும், இராணுவத்தினரும் குவிக்கப்பட்டனர். இதனால் அங்கு பதற்றம் நிலவியது.**

1990 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 9 ஆம் திகதி கொக்குவில், பனிச்சையடி, பிள்ளையாரடி, சத்துருக்கொண்டான் உள்ளிட்ட பிரதேசங்களைச் சேர்ந்த 85 பெண்கள், 10 வயதுக்கு உட்பட்ட 42 சிறுவர்கள், 25 வயோதிபர்கள் உட்பட 186 அப்பாவி பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டிருந்தனர். இராணுவத்தினராலும், ஊர்காவல் படையினராலும், ஒட்டுக்குழுவினராலும் இந்தப் படுகொலை அரங்கேற்றப்பட்டிருந்தது. இந்தப் படுகொலையின் 34 ஆம் ஆண்டு நினைவேந்தல் இன்றாகும். இந்த நினைவேந்தலைச் செய்வதற்காகப் படுகொலை செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் மற்றும் பொதுமக்கள் இன்று ஆயத்தம் செய்து கொண்டிருந்த வேளையில் மேற்படி அராஜகச் செயலில் பொலிஸார் ஈடுபட்டனர்.

இதனைத் தொடர்ந்து பொலிஸ் ஜீப் வாகனத்தில் இழுத்து ஏற்றப்பட்ட சமூகச் செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட 7 பேரிடமும் வாக்குமூலம் பதிவு செய்த பின்னர் அவர்களைப் பொலிஸார் அங்கு இறக்கி விட்டனர்.











# வரிசை யுகம் மீண்டும் வர ஒருபோதும் இடமளியேன்!

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்பாராதவிதமாக அந்த இடத்துக்குச் சென்ற ஜனாதிபதியை இளைஞர்கள் அன்புடன் வரவேற்றனர்.

இளைஞர்கள் மத்தியில் அமர்ந்து அவர்களுடன் சிநேகபூர்வமாக உரையாடிய ஜனாதிபதி, அவர்களின் கேள்விகளுக்குச் சாதகமான பதில்களை வழங்கினார்.

நீங்கள் அரசிடம் இருந்து என்ன எதிர்பார்க்கிறீர்கள் என்று அங்கிருந்த இளைஞர் ஒருவரிடம் ஜனாதிபதி கேட்டதற்கு அந்த இளைஞர் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்றார்.

நாட்டின் இளைஞர்கள் மகிழ்ச்சியாக இருக்க நல்ல அரசு அவசியம் என்று தெரிவித்த ஜனாதிபதி, நாட்டின் இளைஞர்களுக்கு நல்லதொரு பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் பொறுப்பை தாம் எடுத்துக்கொள்வதாகவும் குறிப்பிட்டார்.

மீண்டும் வரிசையில் நிற்க முடியாது என்று இளைஞர் ஒருவர் தெரிவித்த கருத்துக்குப் பதிலளித்த ஜனாதிபதி, தனது ஆட்சியில் இந்த நாட்டின் இளைஞர்கள் சினிமா வரிசையில் மாத்திரமே நிற்க வேண்டி ஏற்படும் என்றார்.

இளைஞர் ஒருவரின் வேண்டுகோளுக்கு இணங்க, தனது கடந்த கால அனுபவத்தை நினைவு கூர்ந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கல்வி அமைச்சராக தாம் வெள்ளை அறிக்கையைச் சமர்ப்பித்த போது, ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தன, தன்னை அழைத்து வெள்ளை அறிக்கை நல்லதுதான், ஆனால் மறுசீரமைப்புகளை முன்னெடுக்கச் சென்று அரசுக்கு ஆபத்தை ஏற்படுத்த வேண்டாம் என்று எச்சரித்தார்.

மேலும், அந்த மறுசீரமைப்புகளைச் செய்து தொழிலை இழக்க வேண்டாம் என்று ஜே.ஆர். ஜயவர்தன தமக்கு அறிவுறுத்தல்களை வழங்கியதை நினைவுகூர்ந்த ஜனாதிபதி, அந்த அறிவுறுத்தல்களுக்கு அமைய தான் இதுவரை செயற்பட்டதாகவும், ஆனால் இம்முறை நாட்டின் பொறுப்பை ஏற்றுக் கொண்டதன் பின்னர் அவற்றுக்கு முரணாக நடக்க நேரிட்டதாகவும் தெரிவித்தார்.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் தாம் நாட்டைப் பொறுப்பேற்ற போது பொருளாதாரம் முற்றாக வீழ்ச்சியடைந்திருந்ததை நினைவுகூர்ந்த ஜனாதிபதி, கடன் சுமையுடன் தொடர்ந்தும் சென்றால் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடையும் என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்ததாகவும் தெரிவித்தார்.

அதன் பிரகாரம், உள்நாட்டு வங்கிகள் ஊடாக கடன் பெற வேண்டாம் என்றும் பணத்தை அச்சிட வேண்டாம் எனச் சர்வதேச நாணய நிதியம் அறிவுறுத்தியதாகவும், அந்த நிலையைக் கருத்தில்கொண்டு அரச வருமானத்தை ஈட்டுவதற்கு வட் வரியை அதிகரிக்க வேண்டியேற்பட்டதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அந்தச் செயற்பாடுகள் முன்னெடுக்கப் படாவிட்டால் நாட்டை தற்போதைய நிலைக்குக் கொண்டு வர முடியாது என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதன்போது சுட்டிக்காட்டினார்.

இந்த இடத்துக்கு எதிர்பாராத விதமாக வருகை தந்தமைக்காக ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்த இளைஞர்கள், தமது தேவைகள், எதிர்பார்ப்புகள் குறித்து ஜனாதிபதியுடன் நேரடியாகக் கலந்துரையாட முடிந்தமை தொடர்பில் தமது மகிழ்ச்சியையும் தெரிவித்தனர் என்று ஜனாதிபதி ரணிலின் தேர்தல் பிரசார ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.





# செய் நன்றி மறவாத சமூகம் என்பதால் மலையக மக்களின் ஆதரவு ரணிலுக்கே

## இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் கூறுகின்றார்



"மலையக மக்கள் செய் நன்றி மறவாத சமூகம் என்ற வகையில் கஷ்டத்திலிருந்து எம்மை மீட்டெடுத்த தலைவருக்குப் பிரதி உபகாரம் செய்வதற்கு இப்போது வாய்ப்புக் கிடைத்திருக்கின்றது." – என்று இராஜாங்க அமைச்சர் அ.அரவிந்தகுமார் தெரிவித்தார்.

ஹப்புத்தளையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நடைபெற்ற "ரணிலால் முடியும்" வெற்றிப் பேரணியில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

"இதுவரையில் ஒவ்வொரு அரசியல் கட்சிகளும் நவக்கிரகங்களைப் போல் ஒவ்வொரு பக்கமாகத் திரும்பி நின்றோம். இன்று அனைத்துத் தரப்பினரையும் ஒன்றிணைக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முடிந்திருக்கிறது.

மலையக மக்கள் காணியின்றி தவித்த யுகத்துக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கான சட்ட திட்டங்களை ஜனாதிபதி தயாரித்திருக்கின்றார்.

அதனால் மலையக மக்களுக்கு வீட்டு உரிமையும் காணி உரிமையும் கிடைக்கப்போகும் நாட்கள் வெகுதூரத்தில் இல்லை என்பது அனைவருக்கும் தெரியும். கடந்த பொருளாதார நெருக்கடியால் சகல மக்களும் கஷ்டப்பட்டனர்.

இன்று 38 வேட்பாளர்கள் களமிறங்கியுள்ளனர். அவர்களில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மட்டுமே கல்விப் புலமையும், வலுவான சர்வதேச தொடர்புகளும் உள்ளன. அதேபோல் நாட்டு மக்களும் அவருக்கு ஆதரவாக இருப்பதால் அவருக்கு அசுர பலம் கிடைத்திருக்கின்றது.

எனவே, மலையக மக்கள் செய் நன்றி மறவாத சமூகம் என்ற வகையில் கஷ்டத்திலிருந்து எம்மை மீட்டெடுத்த தலைவருக்குப் பிரதி உபகாரம் செய்வதற்கு இப்போது வாய்ப்பு கிடைத்திருக்கின்றது. இன்று ரணிலைத் தவிர்த்து 37 பேருக்கு ஜனாதிபதி பதவி மீது ஆசை வந்திருக்கின்றது. நாட்டின் எதிர்காலம் கேள்விக்குறியாக இருந்தபோது அவர்களுக்கு அந்த ஆசை ஏன் வரவில்லை.?

அன்று நாட்டை ஏற்றிருந்தால் அவர்களின் எதிர்காலமும் கேள்விக்குறியாகி விடும் என்ற அச்சம் மட்டும்தான் அவர்களிடம் இருந்தனர்.

அதனால் அன்று நாட்டைக் காக்க திராணியற்றவர்கள் இன்று சுயநலமாக நாட்டின் அதிகாரத்தைக் கைப்பற்ற முயற்சிக்கிறார்கள். சிலிண்டர் சின்னம் வாக்குச்சீட்டில் கடையிலிருந்து மூன்றாவதாகக் காணப்படுவதால் இலகுவாக அடையாளம் கண்டு புள்ளடியிடுவது சுலபமானது." – என்றார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### தென்பகுதி...

அளிக்கின்ற வாக்கானது எமது தலையில் மண்ணை நாமே அள்ளிக் கொட்டுவதற்குச் சமமாகவே இருக்கும் என்பதற்கு மாற்றுக் கருத்து இல்லை.

இதில் சஜித் பிரேமதாஸ ஆயிரம் பன்சாலைகளைக் கட்டுவதாகத் தெரிவித்திருக்கின்றார். இந்தநிலையில் யாரோ ஒரு கட்சி கூறுகின்றது என்பதற்காக நீங்கள் அவருக்கு அளிக்கின்ற வாக்கானது பன்சாலைகளுக்கு வைக்கின்ற ஒவ்வொரு கல்லாகத்தான் இருக்கும்.

அதேபோல், ரணில் விக்கிரமசிங்கவுக்கு நீங்கள் அளிக்கின்ற வாக்கானது இருக்கின்ற நிலங்களை இன்னும் இழந்து செல்வதாகவே அமையும். ஒரு கட்டமைப்பாக ஒரு தேசமாக ஓர் இனத்தின் விடுதலைக்காக இருந்த எம்மைச் சிதைத்த பெருமை ரணிலைத்தான் சாரும்.

அதேபோல் அநுரகுமார திஸாநாயக்க எமது இணைந்த வடக்கு – கிழக்கைப் பிரித்தவராக இருக்கின்றார். இவ்வாறானவர்களைத் தென்பகுதியில் இருந்து அழைத்து வந்து மாலை போட்டு பொன்னாடை போர்த்தி வரவேற்கின்ற ஒரு வெட்கம் கெட்ட சமூகமாக நாம் மாறி வருகின்றோம்.

ஆகவே, தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு ஊடாக ஒரு செய்தியைச் சொல்வதற்காகவே நான் வந்திருக்கின்றேனே தவிர, ஒரு ஜனாதிபதியாக வருவதற்கு அல்லது நிறைவேற்று அதிகாரம் கொண்ட அந்தக் கதிரையைத் தட்டிப் பறிப்பதற்காக இல்லை.

ஈழ மண்ணில் இழந்த உரிமைகளை மீட்பதற்காக நாங்கள் நாங்களாகவே இருக்கின்றோம் என்ற தகவலை சர்வதேசத்துக்கும் இந்தியாவுக்கும் தென்னிலங்கைக்கும், நாட்டில் ஒன்பதாவது ஜனாதிபதியாக வர இருக்கின்றவருக்கும் நாங்கள் கொடுக்க இருக்கின்றோம்.

எங்களுடைய வடக்கு – கிழக்கில் ஓர் இனமாக – ஒரு தேசமாக ஒன்றிணைந்த கட்டமைப்புக்குள் சமஷ்டி அடிப்படையிலான ஒரு தீர்வைப் பெறுவதற்காக எங்களுடைய இனம் ஒன்றிணைந்து தனது ஆதரவைத் தெரிவிக்கின்றது என்கின்ற ஒரு செய்தியை நாங்கள் அவர்களுக்குச் சொல்ல வேண்டும்.

இந்தப் 13 நாட்களுக்குப் பல போலியான செய்திகள் என்னைப் பற்றி வரலாம். எதிர்வரும் 20ஆம் திகதி கூட அரியநேத்திரன் இவருக்கு ஆதரவு தெரிவிக்கின்றார், அவருக்கு ஆதரவு தெரிவிக்கின்றார் என்ற செய்தி கூட சமூக வலைத்தளங்களின் ஊடாக வெளிவரலாம். ஆனால், நான் எந்தவிதமான மாற்றத்துக்கும் உட்படப் போவதில்லை.

ஆகவே, எதிர்வரும் 21ஆம் திகதி நீங்கள் போடுகின்ற புள்ளடியானது எமது இனத்துக்கான புள்ளடி, எமது விடுதலைக்கான புள்ளடி, எமது மண் மீட்புக்கான புள்ளடி என்பதை உணர்ந்து செயற்படுங்கள்." – என்றார்.

---

### பாக்கு மரத்தில்...

பசறையில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் 16 வயதுடைய சிறுவனே உயிரிழந்துள்ளார்.

வீட்டுக்கு அருகாமையில் உள்ள பாக்கு மரத்தை வெட்டுவதற்காக மேற்படி சிறுவன் நேற்று மாலை பாக்கு மரத்தில் ஏறி நுனிப்பகுதியில் இருந்து மரத்தை வெட்டும் போது தவறி மரத்தில் இருந்து கீழே வீழ்ந்துள்ளார். அவர் பலத்த காயமடைந்த நிலையில் பசறை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டதன் பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காகப் பதுளை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அங்கு அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி இன்று அதிகாலை உயிரிழந்துள்ளார்.

சடலம், பதுளை பொது வைத்தியசாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளைப் பசறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




# மட்டக்களப்பில் இராஜாங்க அமைச்சர் தலைமையில் தேர்தல் பிரச்சாரங்கள்!

(பழுவூரான்)

ஜனாதிபதித் தேர்தலில் இந்த முறை சுயேட்சை வேட்பாளராகப் போட்டியிடும் ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை உறுதி செய்யும் வகையில் நாடளாவிய ரீதியில் 22 தேர்தல் மாவட்டங்களிலும் சனிக்கிழமை தேர்தல் பிரச்சாரங்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டிருந்தன.

அந்த வகையில் ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை உறுதிப்படுத்தும் தேர்தல் பிரச்சாரத்தின் ஆரம்ப நடவடிக்கைகளை கிராமிய வீதிகள் இராஜாங்க அமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி முன்னெடுத்திருந்தது.

இதன் பிரகாரம் மட்டக்களப்புச் சந்தைத் தொகுதி, பஸ் நிலையம் உள்ளிட்ட நகரின் பிரதான பகுதிகளில் பிரசாரம் முன்னெடுக்கப்பட்டது.





# மக்களது பிரச்சினைகளுக்கு ஜனாதிபதி தேர்தலின் பின் தீர்வு

## குகதாசன் எம்.பி. மக்களிடத்தில் உறுதி

(ஹஸ்பர்)

மக்களது ஒவ்வொரு பிரச்சினைகளுக்கும் ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் தீர்வு எட்டப்படும்.

இவ்வாறு திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் தெரிவித்துள்ளார்.

மூதூர் புளியடிச்சோலை கங்குவேலி சித்திவிநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவத்தின் சங்காபிசேகத்துக்கு சென்றிருநித நிலையில் மக்களுடன் விசேட கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

குறித்த பிரதேசத்தில் நிலவும் குறைபாடுகள் பிரதேச அபிவிருத்தி தொடர்பிலும் எதிர்காலத்தின் அபிவிருத்தி தொடர்பிலும் மக்களிடம் கேட்டறிந்து கொண்டார்.

இதில் இலங்கை தமிழரசு கட்சியின் உள்ளூராட்சி மன்ற முன்னாள் உறுப்பினர்கள் கட்சி ஆதரவாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இந்தக் கிராமத்துக்கு உதவிகளைச் செய்ய வேண்டிய நிலையில் உள்ள போதும் தற்போது தேர்தல் காலம் என்றபடியால் தேர்தலின் பின்னரே உதவிகள் வழங்கப்படும் என்றும் தெரிவித்தார்.

கிராமங்களில் உள்ள முக்கிய பிரச்சினைகளைத் தீர்க்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். தை மாதத்தின் பின் வரவு – செலவுத் திட்டத்தின் பின்னரான காலப் பகுதியில் அபிவிருத்தி வேலைகளை ஆரப்பிக்க முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# ஊட்டச்சத்துக் குறைபாடு!

இலங்கையில் குழந்தைகளில் வைட்டமின் டி குறைபாடுகள் அதிகரித்து வருகின்றன என மருத்துவ நிபுணர் ஒருவர் எச்சரித்துள்ளார் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

குழந்தைகளில் வைட்டமின் டி குறைபாடு ஏற்படுவதற்கு சூரிய ஒளியின் பற்றாக்குறையே முக்கிய காரணம் என குழந்தை மருத்துவ ஆலோசகர் ர் டாக்டர் தீபால் பெரேரா சுட்டிக்காட்டினார் என்று தெரிவிக்கப்படுகின்றது

“இணையம் மற்றும் சமூக ஊடகங்களுக்கு அடிமையாதல் மற்றும் சிறந்த மதிப்பெண்களைப் பெறுவதற்கான அதிகரித்த போட்டி ஆகியவை குழந்தைகள் வெளியிலும் சூரிய ஒளியிலும் வெளிப்படுவதைக் குறைத்துள்ளன” - என்று அவர் சுட்டுவது முற்றிலும் உண்மை.

இதன் விளைவாக குழந்தைகள் அடிக்கடி உடல்நிலை சரியில்லாமல் போதல் மற்றும் ஊட்டச்சத்து குறைபாடு போன்ற நெருக்கடியை எதிர் கொள்கின்றனர் எனக் கூறிய அவர், குழந்தைகளின் ஊட்டச்சத்து குறைபாடுக்கு வைட்டமின் டி குறைபாடு ஒரு காரணம் என்றும் குறிப்பிட்டிருக்கின்றார்.

குழந்தைகள் வெயிலில் ஈடுபடவும், மீன், முட்டையின் மஞ்சள் கரு மற்றும் ஆரோக்கியமான கொழுப்புகள் போன்ற உணவுகளை உட்கொள்ளவும் அனுமதிக்க வேண்டும் என்று குழந்தை நல மருத்துவர் ஆலோசனை கூறுகின்றார்.

இதற்கிடையில், தொற்றுநோயியல் பிரிவு, ஒவ்வொருவரும் வைட்டமின் டி ஐ உற்பத்தி செய்வதை உறுதிப்படுத்த் தினமும் காலை 10 மணி முதல் மாலை 3 மணி வரைக்கு உட்பட்ட வேளையில் குறைந்தது 15 முதல் 20 நிமிடங்கள் வரை சூரிய ஒளியில் இருக்க வேண்டும் என அது பரிந்துரைத்துள்ளது.

வைட்டமின் டி இன் குறைபாடு குழந்தைகளில் எலும்பு வளர்ச்சியை பாதிக்கும், எலும்பு வலியை ஏற்படுத்தும் என்று தேசிய சுகாதார சேவை எச்சரித்துள்ளது.

அதன் கருத்துப்படி, 1 முதல் 4 வயதுடைய குழந்தைகளே மற்ற வயதினரைவிட வைட்டமின் டி குறைபாட்டால் அதிகம் பாதிக்கப்படுகின்றனர்.

ஏறத்தாழ 200 மரபணுக்களின் செயல்பாடுகளை வைட்டமின்-டி தான் கட்டுப்படுத்துகிறது. உடல் வளர்ச்சியிலும் இந்த வைட்டமின் மிக முக்கியப் பங்காற்றுகிறது. சராசரியாக உடலில் வைட்டமின்-டி 30 நானோகிராம் அளவுக்கு இருக்க வேண்டும். 30 நானோகிராமுக்குக் குறைவாக இருந்தால், போதிய அளவு வைட்டமின்-டி இல்லை என்று பொருள். 20 முதல் 29 நானோகிராம் வரை இருப்பவர்களுக்கு சிகிச்சையோ, மருந்துகளோ தேவையில்லை. வாழ்வியல் மாற்றங்கள் மட்டுமே பரிந்துரைக்கப்படும். 20 நானோகிராமுக்கும் குறைவாக இருப்பதையே `வைட்டமின்-டி குறைபாடு’ என்கிறோம். இத்தகைய சூழலில்தான் சிகிச்சை தேவைப்படும் எனச் சுட்டப்படுகின்றது.

உடல்வலி, மூட்டுவலி, அதிக உடல் சோர்வு, மிகவும் பலவீனமாகக் காணப்படுவது போன்றவை வைட்டமின்-டி குறைபாட்டின் முக்கிய அறிகுறிகள். உடலில் வைட்டமின்-டி குறைவதற்கு பல்வேறு காரணங்கள் உண்டு. உடலில் சூரிய ஒளிபடாமலே இருப்பதுதான் மிக முக்கியமான காரணம்.

இவைதவிர, உடல்பருமன், சிறுநீரகச் செயலிழப்பு, கல்லீரல் செயலிழப்பு, சில மருந்துகளின் பக்கவிளைவுகள் போன்றவையும் காரணமாக இருக்கலாம்.

வயதானவர்களுக்கு வைட்டமின் டி குறைபாடு ஏற்பட்டால் அதன் விளைவாக அவர்களுக்கு டிமென்ஸியா என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும் நினைவிழப்பு நோய் தோன்றுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகரிப்பதாக பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் தெரிவித்திருக்கிறார்கள்.

இந்தப் பாதிப்பு சிறு குழந்தைகள், சிறுவர்களுக்கு வராமல் பார்த்துக் கொள்ளுவது பொறுப்புள்ள ஒவ்வொரு பெற்றோரினதும் கடமையாகும்.



# செல்வேரி குடி தண்ணீர் திட்டம் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைப்பு

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட தலை மன்னார் பிரதான வீதி, செல்வேரி கிராமத்தில் உள்ள மக்களின் குடி தண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் அமைக்கப்பட்ட செல்வேரி சுத்திகரிக்கப்பட்ட குடி தண்ணீர் திட்டம் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மன்னார் செல்வேரி பகுதியில் உள்ள பொது மக்கள் நீண்ட காலமாக குடி தண்ணீர் பெறுவதில் பல்வேறு சவால்களை எதிர்கொண்டு வந்தனர். இந்த நிலையில் அவர்களின் கோரிக்கைக்கு அமைவாக இராணுவத்தின் 54 ஆவது காலாட்படையின் ஒழுங்கமைப்பில் இந்தக் கிராம மக்கள் குடி தண்ணீர் பெறும் வகையில் இது அமைக்கப்பட்டு மக்களின் பாவனைக்கு கையளிக்கப்பட்டது.

நிகழ்வில் இராணுவத்தின் வன்னி பிராந்திய கட்டளையிடும் தளபதி மேஜர் ஜெனரல் பீரிஸ் மற்றும் 54 காலாட்படை பிரிவின் பொறுப்பதிகாரி மேஜர் ஜெனரல் ராஜபக்ஷ, மன்னார் மாவட்ட அரச அதிபர் க.கனகேஸ்வரன் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டனர்.



குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998






# நாகேந்திரன் ஞாபகார்த்த சம்பியன் கல்முனை பெஸ்ட் இலவன் அணிக்கு!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

துறைநீலாவணை சென்றல் விளையாட்டுக்கழகம் நடத்திய 64 அணிகளை உள்ளடக்கிய அணிக்கு 8 பேர் கலந்து கொண்ட 5 ஓவர் மட்டுப் படுத்தப்பட்ட மின்னொளியிலான நாகேந்திரன் ஞாபகார்த்த கிண்ண கிறிக்கட் சுற்று தொடரில் பல முன்னணி விளையாட்டுக் கழகங்களை வெற்றி கொண்டு கால் இறுதி போட்டியில் காந்தி ஸ்டார் விளையாட்டு கழகத்தை யும் அரை இறுதி போட்டியில் ஒலுவில் ஈஸ்டன் வொறியர்ஸ் விளையாட்டு கழகத்தையும் இறுதிப் போட்டியில் அக்கரைப்பற்று ஜொலி போய்ஸ் விளையாட்டு கழகத்தையும் வெற்றி பெற்றுச் சம்பியன் கிண்ணத்தை கல்முனை பெஸ்ட் இலவன் அணி சுவீகரித்தது.

சம்பியன் அணிக்கு 50 ஆயிரம் ரூபா பணப் பரிசும் வெற்றிக் கிண்ண மும் வழங்கப்பட்டன.

துறைநீலாவணை பொது விளை யாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இறுதி போட்டியின் சிறப்பாட்டக்காரராக கல்முனை பெஸ்ட் இலவன் அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் றஸா தெரிவு செய்யப்பட்டார். சுற்று தொடரின் சிறந்த துடுப்பாட்ட வீரராகவும், அதி கூடிய ஆறு ஓட்டம் பெற்ற வீரராகவும் சகல துறை ஆட்டக்காரர் அப்லால் காரியப்பர் தெரிவு செய்யப்பட்டார்.



# ஜனாதிபதி வேட்பாளர் சஜித்தை ஆதரித்து தலவாக்கலையில் பிரசாரம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும், எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவை ஆதரித்து, நுவரெலியா – தலவாக்கலையில் பிரசாரக் கூட்டம் நடைபெற்றது.

தமிழ் முற்போக்கு கூட்டணி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தக் கூட்டத்தில் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ, தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், பிரதி தலைவர்களான வே.இராதாகிருஷ்ணன், பழனி திகாம்பரம், உதயகுமார், நாடாளுமன்ற உறுப்பினர்களான மயந்த திசாநாயக்க,



நளின் பண்டார, சுஜீவ சேனசிங்க, நுவரெலியா மாவட்ட அமைப்பாளர்களான ஹிரன்யா ஹேரத், அசோக சேபால உட்பட பலரும் பிரசாரக் கூட்டத்தில் பங்கேற்றனர்.




# இங்கிலாந்து பிரதமரின் பாலஸ்தீன எதிர்ப்பும் ஈழம் மீதான ஆதரவும் ?

■ ஐங்கரன் விக்கினேஸ்வரா

இங்கிலாந்தின் தொழிற் கட்சியின் முன்னாள் தலைவராகவும், எதிர்க் கட்சி தலைவராகவும் இருந்த இடதுசாரிப் போக்காளரான ஜெர்மி கோர்பின் (*Jeremy Corbyn*) பாலஸ்தீன ஆதரவு கொள்கைகளை முன் வைத்து செயற்பாட்டு வந்தவர். அதன் விளைவாக தொழிற் கட்சியிலிருந்து நீக்கப்பட்டமை அறிந்ததே.

**ஜெர்மி கோர்பின்**
**பாலஸ்தீன ஆதரவு**

ஜெர்மி கோர்பின், நடந்து முடிந்த ஜுலை 4 பொதுத் தேர்தலில் இஸ்லிங்டன் வடக்கு தொகுதியில் சுயேட்சை வேட்பாளராக போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளார்.

ஆனாலும் இஸ்லிங்டன் வடக்கு தொகுதியில் தொழிற்கட்சி வெற்றி பெறவில்லை. அங்கு மூத்த இடதுசாரி மற்றும் தீவிர பாலஸ்தீனிய சார்பு செயற் பாட்டாளரான ஜெர்மி கோர்பின் சுயேச்சையாக வெற்றி பெற்றமை தொழிற்கட்சிக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

காசாவில் தொடரும் இனப் படுகொலைக்கு எதிராகப் பெப்ரவரி 3, 2024 அன்று லண்டனில் நடந்த போராட்டத்தில் ஜெர்மி கோர்பின் பேசினார். அவ்வேளை தொழிற் கட்சியை "நேட்டோவின் கட்சி" (*Party of NATO*), எனவும் காரசாரமாக இஸ்ரேலின் பாலஸ்தீன நடவடிக்கைகளுக்கு எதிராக அவர் எதிர்ப்பைக் காட்டியுள்ளார்.

**கியர் ஸ்டார்மரின்**
**இஸ்ரேல் ஆதரவு**

காசாவில் பாலஸ்தீனியர்கள் மீதான இஸ்ரேலின் இனப்படுகொலைக்கு ஆதரவு அளித்ததன் காரணமாக மில்லியன் கணக்கான தொழிலாளர்கள் மற்றும் இளைஞர்கள் கியர் ஸ்டார்மரின் கட்சிக்கு எதிராக திரும்பியதாகவும் கூறப்பட்டது.

ஜெர்மி கோர்பின் போர் நிறுத்தத்தை ஆதரிக்குமாறு அனைத்துக் கட்சிகளுக்கும் அவர் வேண்டுகோள்களை விடுத்ததன் மூலம் போரை நிறுத்தும் கூட்டணியின் (*Stop the War Coalition*) மேடைகளில் கியர் ஸ்டார்மரின் தொழிற்கட்சியின் பெயரைக் குறிப்பிட்டுக் காரசாரமாகப் பல தடவைகள் விமர்சித்துள்ளார்.

காஸாவில் பாரிய படுகொலைகள் மற்றும் இன அழிப்பு போருக்கு ஆதரவினை தொழிற் கட்சியின் தலைவர்கள் கொண்டிருப்பதால் ஜெர்மி கோர்பின் இப்போது தனித்து நின்று தொழிற்கட்சிக்கு எதிராக போட்டியிட்டுள்ளார்.



உண்மையிலேயே பாலஸ்தீன ஆதரவு காரணமாகத் தொழிற்கட்சியின் தலைவரான ஸ்டார்மர், ஜெர்மினை தேர்தலில் போட்டியிட வாய்ப்பை மறுத்ததுடன் கட்சியை விட்டும் நீக்கினார். கடந்த நான்காண்டு காலத்தில், தொழிலாளர் கட்சிக்குள் இருந்த இடது சாரிகளை ஒழித்துக் கட்டுவதில் முனைப்புடன் செயல்பட்டவர்தான் தற்போது பிரதமராக பொறுப்பேற்றுள்ள அக்கட்சியின் தலைவர் ஸ்டார்மர் ஆவார்.

ஜெர்மி கோர்பின் போன்றே, லேபர் கட்சியில் உள்ள மேலும் சில முற்போக்கு நபர்களுக்கும் போட்டியிட அனுமதி வழங்காமலும் கட்சியில் செயல்பட விடாமலும் லேபர் கட்சியின் திசையை மாற்றினார் ஸ்டார்மர்.

கட்சியின் காசா கொள்கைகள் மீது அவர்களின் உயர் பதவிகளை விட்டு பல தலைவர்கள் வெளியேறி உள்ளனர்.

**ஜெர்மி கோர்பின்**
**மகத்தான வெற்றி!**

இந்த நிலையில், ஜெர்மி கோர்பின் இஸ்லிங்டன் வடக்கு தொகுதியில் சுயேட்சையாக போட்டியிட்டு லேபர் கட்சியின் மிகப்பெரும் இந்திய வம்சாவளி கோடீஸ்வர ரான பிரபுல் நர்குண்டை (*Praful Nargund*) வீழ்த்தி மகத்தான வெற்றி பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத் தக்கது. இவரது வெற்றி மிகப்பெரும் வெற்றியாக சர்வதேச அளவில் பாராட்டப்படுகிறது.

தொடர்ச்சி▼



# இங்கிலாந்து பிரதமரின் பாலஸ்தீன எதிர்ப்பும் ஈழம் மீதான ஆதரவும் ?

**தொடர்ச்சி▲**

இங்கிலாந்து நாடாளுமன்ற தேர்தலில் ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சியை வீழ்த்தி கியர் ஸ்டார்மர் தலைமையிலான லேபர் கட்சி (தொழிலாளர் கட்சி) வெற்றி பெற்றது. மொத்தமுள்ள 650 நாடாளுமன்ற தொகுதிகளில் 412 தொகுதிகளில் வென்று அதீத பெரும்பான்மையுடன் ஆட்சியில் அமர்ந்தது லேபர் கட்சி.

தொழிலாளர் கட்சி எனப் பொருள்படும் லேபர் கட்சி, பெயரில் தொழிலாளர் கட்சி என்று இருந்தாலும், அது ஒரு முதலாளித்துவக் கட்சியே ஆகும். அதில், கோர்பின் போன்ற இடதுசாரி முற்போக்கு சிந்தனையாளர்கள் ஒரு தரப்பு இருந்தனர். அவர்களை அக்கட்சியில் உள்ள பெரும் பணக்கார அதிகார வர்க்க ஆதரவாளர்கள் ஒழித்துக் கட்டி வருகிறார்கள்.

**பாலஸ்தீன தனிநாடு எதிர்ப்பு**

கடந்த 20 ஆண்டுகளில் இது லேபர் கட்சிக்கு இத் தேர்தல் சிறந்த வெற்றியாக பார்க்கப்படுகிறது. எனினும் இங்கிலாந்தில் இக்கட்சி வியத்தகு மாற்றங்களை ஏற்படுத்த வாய்ப்புகள் இல்லை என்றே கூறப்படுகிறது.

குறிப்பாக, இஸ்ரேல் ஆதரவு, பாலஸ்தீனத்துக்கு அங்கீகாரம் மறுப்பது, போர் பொருளாதாரம், நேட்டோ ஆதரவு, இஸ்லாமிய வெறுப்பு, அதிதீவிர தனியார் மயமாக்கல், தொழிலாளர் விரோதப் போக்கு, புலம்பெயர்ந்தோர் வெறுப்பு என அனைத்திலும் இங்கிலாந்தின் கன்சர்வேடிவ் கட்சி, லேபர் கட்சி, தாராள ஜனநாயகவாதிகள் ஆகியோருக்கு இடையே பெரிய வேறுபாடுகள் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தேர்தலில் பெரும் வெற்றி பெற்ற போதிலும், தொழிற்கட்சி சில பாலஸ்தீனச் சார்பு வேட்பாளர்களுக்கு எதிராகக் கடுமையாகப் போராடியது என்பதும் உண்மையே.

**முஸ்லிம் வாக்குகளில்
பின்னடைவு நிலைமை**

காசா மீதான போரில் அதன் நிலைப்பாட்டின் மீதான அதிருப்தியின் மத்தியில், பிரிட்டனின் தொழிலாளர் கட்சி அதிக முஸ்லிம் மக்கள் வசிக்கும் பகுதிகளில் குறிப்பிடத்தக்க தேர்தல் பின்னடைவைச் சந்தித்துள்ளது.

முஸ்லீம் மற்றும் பிற சிறுபான்மை குழுக்களின் ஆதரவை நீண்ட காலமாக நம்பி வந்த கட்சி, 10 வீதத்துக்கும் அதிகமான மக்கள் முஸ்லிம்களாக அடையாளம் காணும் இடங்களில் அதன் வாக்கு பாரியளவில் குறைந்துள்ளது.

காசாவில் சண்டை நிறுத்தப்பட வேண்டும் என்று தொழிற்கட்சி கூறினாலும், பிரிட்டனின் மக்கள் தொகையில் 6.5 வீதமாக இருக்கும். 3.9 மில்லியன் முஸ்லிம்கள் மக்களை சாந்தப்படுத்தி, மறுபுறம் தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்கான இஸ்ரேலின் உரிமையையும் அது ஆதரித்துள்ளது.

அதேவேளை பாலஸ்தீன அரசை அங்கீகரிப்பது என இக்கட்சி கூறினாலும், அதற்கான திட்டவட்டமான அறிவிப்பை இதுவரை அறிவிக்கவில்லை.

**தொழிற்கட்சியின்
தமிழ் ஆதரவு**

இலங்கையில் சுயநிர்ணயம், அமைதி மற்றும் நீதிக்காக தமிழ் மக்கள் செய்த தியாகங்களை நினைவுகூர வேண்டியது அவசியம் என தற்போதய புதிய பிரதமருமான கியர் ஸ்டார்மர் *(Keir Starmer)* கடந்த மே மாதம் தெரிவித்திருந்தார்.

பிரிட்டிஷ் தமிழர் பேரவை *(BTF)* ஏற்பாடு செய்திருந்த ட்ரஃபல்கர் சதுக்கத்தில் நடந்த நினைவேந்தல் நிகழ்வில் அப்போதய தொழிற்கட்சியுன் தலைவரும், தற்போதய புதிய பிரதமருமான கியர் ஸ்டார்மர் *(Keir Starmer)* இவ்வாறு தெரிவித்திருந்தார்.

தமிழர் தாயகத்தில் உயிரிழந்த தமிழ் பாதிக்கப் பட்டவர்களுக்கும், உயிர் பிழைத்தவர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கும் நீதியைப் பெறுவதற்கான எங்கள் உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்துகிறது, ஐநா மனித உரிமைகள் ஆணையாளரின் பரிந்துரையை அரசாங்கம் பரிசீலிக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறது. ஒரு சர்வதேச நீதி பொறிமுறையை உருவாக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்திருந்தார்.

அத்துடன் 2022 ஆம் ஆண்டில், தற்போதய புதிய பிரதமருமான கியர் ஸ்டார்மர் தமிழர்களுடன் ஆதரவாக நிற்கவும், அட்டூழியங்களைச் செய்த குற்றவாளிகளை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு அனுப்ப ஐ.நா உயர் ஆணையரின் பரிந்துரைகளுக்கு செவிசாய்க்க வேண்டும் என்று இங்கிலாந்து அரசுக்கு அழைப்பு விடுத்தார்.

அனைத்து பாரிய அட்டூழியக் குற்றங்கள் மற்றும் பாரதூரமான மனித உரிமை மீறல்களின் குற்றவாளிகள் பொறுப்புக் கூறப்பட்டு நீதியின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்றும் அவர் பிரிட்டிஷ் அரசுக்கு அழைப்பு விடுத்தார்.

உண்மையான அமைதி மற்றும் நீதிக்கான தமிழ் மக்களுக்காக தொழிற் கட்சி எப்போதும் துணை நிற்கும் என்றும் அவர் 2022 இல் கூறியிருந்தமை குறிப்பிடத் தக்கது.



# இது யாருக்குச் சொந்தம்...?

“என்ர கைய இழந்த இந்த மண்ண விட்டு நான் போகவே மாட்டேன்..., எங்கட துறையில மட்டுந்தான் நாங்கள் தொழில் செய்வம்...” வரலாற்று ரீதியாகவும் காலங் காலமாகவும் அதிகாரம் கொண்டவர்கள் அதிகாரமற்ற, குரலற்ற, ஒடுக்கப்பட்ட மக்களை மௌனிக்க வைப்பது புதிய விடயமயல்ல என்பது அறிந்ததொன்றே. இலங்கையிலும் பெரும்பான்மை இனம், சிறுபான்மை இனமான தமிழர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்ற நிலப்பரப்பை ஆக்கிரமிப்பது, அதிகமாக இடம்பெறுகின்ற ஒரு துயர விடையமாக இருக்கையில், தமிழர் வாழும் நிலப்பரப்பை தமிழர் ஒருவரே ஆக்கிரமிக்க முனைவது என்பது அதிர்ச்சியூட்டும் புதியதொரு விடயமாகவேயுள்ளது.

மண்ணின் வடபுலத்திலுள்ள ஐந்து மாவட்டங்களில் நிலப் பரப்பளவில் முதலிடத்தில் வகிப்பதும் இறுதி யுத்தத்தின் போது பாரிய உயிரிழப்புக்களையும் சொத்தழிவுகளையும் சந்தித்ததுமான மாவட்டமே முல்லைத்தீவாகும்.

இங்கு சூரியன் உதயமாகின்ற கிழக்குக் கடற்கரைப் பகுதி, இயற்கையின் கொடையாகிய கடலன்னையை 70 கிலோ மீற்றர் நீளம் தன்னகத்தே கொண்டு அமைந்துள்ளது.

இந்த மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களில் ஒன்றே தியோகு நகராகும். கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட இக்கிராமதில் கடந்த 1983 ஆம் ஆண்டு காலப் பகுதியின் போது ‘தியோகுப்பிள்ளை’ எனும் கிறிஸ்தவ பாதிரியாரால் மக்கள் குடியமர்த்தப்பட்டமையால் தியோகு நகர் என பெயர் சூட்டப்பட்டதென்பதே இக்கிராம மக்களின் கருத்தாகும்.

நீண்டகால யுத்தத்தாலும் சுனாமிப் பேரலையாலும் தாக்கப்பட்டு பல உயிர்களைப் பலி கொடுத்த இக்கிராமத்தில் வறுமையின் மத்தியில் தற்பொழுது 150 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இவர்களில் 25 குடும்பங்கள் மீன்பிடித் தொழிலையே பிரதான ஜீவனோபாயத் தொழிலாக மேற்கொண்டு வருகின்றன.

41 ஆண்டுகள் அதாவது நான்கு தசாப்தங்கள் கடற்றொழிலை நம்பியே வாழும் மீனவ சமூகம் கடந்த 2016 ஆம் ஆண்டிலிருந்து நிம்மதியற்ற வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறது என்று இக் கிராம மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அதாவது கனடாவில் வசிக்கும் புலம்பெயர் தமிழர் ஒருவர் இக்கிராம மீனவர்கள் தொழில் செய்யும் இறங்கு துறைக்கு அருகில் தனியார் கம்பனி ஒன்றுக்காக குறித்தளவு நிலப் பகுதியை விலைக்குப் பெற்றுக் கொண்டு, சுற்றுலாத் தளத்தை (பல கட்டடங்கள்) அமைத்து வருகின்றார். அதுமட்டுமின்றி கடற்றொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற மீனவர்களுக்கு இடையூறு ஏற்படுத்துவதன் மூலம் மக்கள் அல்லல் படுவதையும் இனங்கான முடிகின்றது.

பல்கலைக்கழகக் கல்வியை முடித்துவிட்டுத் தொண்டு நிறுவனம் ஒன்றில் தொழில் புரிபவரும் கடற்றொழிலை பகுதி நேரமாக மேற்கொள்ளும் கிராமத்து மீனவரான கிருசாந், “எங்கட துறைக்கு பக்கத்துல சுற்றுலா விடுதி களை அமைக்கிற தனியார் கம்பெனி, எங்கட இறங்கு துறையில், நாங்கள் வெயில் நேரத்தில் நிழலுக்க இருந்து வல தட்றத்துக்கும் தொழில் முடிய வலையை கயிறை நிழலுக்க வைச்சிட்டு வீட்ட போறத்துக்கும் ஒரு வாடிக்கொட்டில் போட்டா அதையும் புடிங்கி எறியிறாங்கள்” எனக் குமுறுகின்றார்.

நேரமோ மூன்று மணி, சூரியன் சற்றுச் சரிவாகத்தான் வானத்தில் உள்ளது. எனினும் வெயிலின் சூடு சற்றும் குறையவில்லை. கடற்கரையில் ஒரு ஆண் மற்றும் ஒரு பெண் என இருவர் மாத்திரமே வலையை இழுத்து படகினுள் போடுகின்றனர். அவ்வேளை, ஒரு கண் பார்வை இழந்த மிகவும் மெலிந்த தோற்றம் கொண்ட அங்குள்ள அக்கிராமத்து மீனவரின் மனைவி “மண்ணெண்ணெய்யைச் சிலவழிச்சு, இரவிரவா கஷ்டப்பட்டு நித்திர முழிச்சு அஞ்சு பத்து கிலோ மீன் பிடிச்சும் அதையும் வெயில நாற வைக்கிற மோசமான நிலையிலதான் நாங்க இருக்கிறம்” என கவலை தெரி விக்கின்றார்.

இறுதி யுத்தத்தில் தனது ஒற்றைக் காலை இழந்து, இரண்டு சிறுநீரகங்களும் செயலிழந்த நிலையில் மூன்று பிள்ளைகள் மற்றும் மனைவியைக் கடற்றொழில் செய்து, பார்த்துவரும் கிராமத்து மீனவர் நகுலேஸ்வரன், “நாங்கள் கடலுக்குப் போய் மீன் பிடிக்கிற தொழில மட்டும் செய்யல, கடக்கரையில ஏரல் கிண்டி, நண்டு புடிச்சு, தூண்டிலும் போட்டு, வலையும் வீசுவம். ஆனால் இப்ப எங்கட துறையில இதை செய்யவே பயமா இருக்கு...” என அஞ்சுகிறார்.

மேலும் குறித்த பிரச்சினை தொடர்பில் பிரச்சினை யுடன் தொடர்புடைய தனியார் கம்பனியின் தரப்பினர் “இந்த இடத்தை நாங்கள் காசு கொடுத்து விலைக்கு வாங்கிட்டோம், இந்த இடத்துக்கு நேரேயுள்ள கடற் கரைவரை எங்களுடையது.” என உரிமை கூறுகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பதிவிலுள்ள சிலாவத்தை தெற்கு கடற்றொழிலாளர் சங்கத்தின் தலைவரும் யுத்தத்தின்போது தனது ஒரு கையை இழந்த மீனவருமாகிய யோகேந்திரன், “நான் பிறந்து வளர்ந்து உழைச்சது இந்த மண்ணில. இந்த மண்ணிலதான்

தொடர்ச்சி▼



# இது யாருக்குச் சொந்தம்...?

தொடர்ச்சி▲

என்ர கையை இழந்தனான். இந்த மண்ண விட்டு போய் எங்கேயுமே தொழில் செய்ய மாட்டேன்...” என கண்ணீர் வடிக்கின்றார்.

இங்குள்ள மற்றுமொரு இக்கிராம மீனவரான இராமகிருஸ்ணன், “இண்டைக்குக் கோயில் திருவிழா. அதனால எங்கட ஊரில யாருமே கடலுக்கு போக மாட்டோம். கிறிஸ்தவர்களின் தேவாலய பெருநாளின் போது இந்துக்களும், இந்துக்களின் கோயில் திருவிழாவின் போது கிறிஸ்தவர்களும் அந்த நாளைக் கடவுளுக்காக விட்டு, யாருமே கடற்றொழிலிலுக்கு பேகமாட்டார்கள். இண்டைக்கு எல்லோருக்கும் விடுமுறை நாளாகத்தான் இருக்கும்” எனக் கூறுவதில் இருந்து கிராமத்து மக்களின் ஒற்றுமையைப் புரிந்து கொள்ள முடிகின்றது.

இலங்கையின் கடற்கரையோர பாதுகாப்பு சட்டத்துக்கு அமைய ஒவ்வொரு கரையோர பகுதியிலும் கடலில் இருந்துபாதுகாப்பு வலயமாக 100 அல்லது 200 மீற்றர் தூரம் உள்ளன. இந்த அளவு ஒவ்வொரு மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு இடங்களின் கடற்கரையை பொறுத்து வேறுபடும்.

குறித்த பகுதியை யாருமே சொந்த உரிமை கொண்டாட முடியாது.

குறித்த கிராமத்து மக்களின் பிரச்சினை தொடர்பாகக் கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்கள உதவிப் பணிப்பாளர், “சிலாபத்தை தெற்கு இறங்கதுறை திடீரென வந்த இறங்குதுறை அல்ல. இந்த இறங்கு துறைக்கு நீண்ட வரலாறு உண்டு. மக்களின் உரிமை சும்மா பறிபோகக் கூடாது.எப்பொழுதும் நீதி வெல்லப்பட வேண்டும் என்றார்.

நீண்ட கால யுத்தத்தாலும் சுனாமிப் பேரலையாலும் தாக்கப்பட்டு பல்லாயிரக் கணக்கான உயிர்களைப் பலிகொடுத்துத் தமக்கு உரிய அனைத்தையும் இழந்து



இன்று தமது வாழ்வைக் காத்துக் கொள்ள ஏங்கும் மக்கள், தமது இறங்குதுறைக்கு அருகில் சுற்றுலாத்தளம் அமைப்பதை விரும்புவதோடு அதனை வரவேற் கின்றனர்.

சுற்றுலாத்தலங்கள் உருவாகும்போது தமது கிராமமும் விருத்தியடையும். கிராம வளர்ச்சியுடன் தமது தொழில்

நடவடிக்கை சிறப்பாக இடம்பெற வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளனர். ஆனால் இந்த சுற்றுலாத் தளததைக் காரணம் காட்டித் தங்கள் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு இடையூறு அல்லது தடை ஏற்படுத்த வேண்டாம் என்பதே இக்கிராம மக்களின் மனநிலையாகவுள்ளது என்பதை எவ்வித அறிந்துகொள்ள முடிகின்றது.

எனவே சம்மந்தப்பட்ட பிரச்சினையில் ஒவ்வொரு தரப்பினரிடமும் நியாயங்கள் இருக்கலாம். அவை மதிக்கப்பட வேண்டும். ஆனால் பொறுப்பதிகாரிகள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் இப்பிரச்சினையில் நியாயமான முறையில் தலையிட்டு அமைதி வழியில் ஓர் இணக்கப்பாட்டை ஏற்படுத்தி மக்களின்இயல்பு வாழ்வுக்கு ஆவன செய்யவேண்டியது தற்போது மிக அவசியமானது.

**யோ.ஜோவர்ணன்**
ஊடகக்கற்கைகள் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.





# மட்டக்களப்பில் உலக சாதனை படைத்துள்ள 5 வயதுச் சிறுமி!

(பழுவூரான்)

5 வயதும் 11 மாதமும் நிரம்பிய சிறுமி 6 நிமிடம் 51 செக்கன் 50 மில்லி செக்கன்களில் 200 கூட்டல் மற்றும் கழித்தல் கணக்குகளை அபாகஸ் முறை மூலம் தீர்வெழுதி சோழன் உலக சாதனை படைத்த நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை (08) மட்டக்களப்பு கல்லடி கிறீன்கார்டன் விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது.

சோழன் உலக சாதனைப் புத்தக மட்டக்களப்பு தலைவர் கதிரவன் த.இன்பராசா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், மட்டக்களப்பு சின்ன ஊறணியைச் சேர்ந்த வேல்முருகன் சகோதரர்களின் வாரிசான சுப்பிரமணியம் காவியஸ்ரீ(5 வயது 11 மாதம்) 200 கூட்டல் மற்றும் கழித்தல் கணக்குகளைத் தீர்த்ததுடன், வாய்மொழி மூலமான கணித வினாக்களுக்கும் விடையளித்தார்.

இந்த நிகழ்வில் மண்முனை வடக்குப் பிரதேச செயலாளர் வ.வாசுதேவன் முதன்மை விருந்தினராகவும், மண்முனை வடக்கு கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஆர்.ஜே.பிரபாகரன் மற்றும் யு.சி.எம்.ஏ.எஸ். கல்வி நிறுவனப் பணிப்பாளர் சித்திரா இராமநாதன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும், மட்டக்களப்பு தமிழ்ச் சங்கத் தலைவர் வி.றஞ்சிதமூர்த்தி, கதிரவன் பட்டிமன்றப் பேரவை ஆலோசகர் கவிஞர் அ. அன்பழகன் குரூஸ், உதவும் கரங்கள் அமைப்பின் தலைவர் ச.ஜெயராஜா, சோழன் உலக சாதனை நிறுவனத்தின் கனேடிய நாட்டுக்கான தலைவரின் தாயார் பேரின்பம் பார்வதி, அகிலன் பவுண்டேசனின் லண்டன் இணைப்பாளர் கலாநிதி வி.ஆர்.மகேந்திரன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர்.



# விடுமுறையில் வெளிநாடு சென்ற அரச உத்தியோகத்தருக்கு ஆப்பு!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

விடுமுறையில் வெளிநாடுகளுக்கு சென்ற அரச உத்தியோஸ்தர்கள், ஊழியர்கள், விடுமுறை நிறைவடைந்த பின்னர் உரிய தினத்தில் கடமைக்கு சமுகமளிக்க வேண்டும். இல்லாது விட்டால் சேவையில் இருந்து விலகிச் சென்றதாக கருதப்படுவார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயமானது பொது நிர்வாக அமைச்சின் செயலாளரின் கையொப்பத் துடன் வெளியான சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், வெளிநாட்டு விடுமுறை காலத்தை நீடிக்க வேண்டு மாயின் முதலாவது விடுமுறை காலம் நிறைவடைவதற்கு முன்னர் அதற்கான அனுமதியை பெற்றுக்கொள்ள வேண் டும் என்றும் அரச நிறுவன பிரதா னிகளுக்கு அனுப்பப்பட்டுள்ள சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுமுறை காலத்தை நீடித்துக் கொள்ளும் அனுமதியை பெறுவதில் ஏற்படும் சிக்கல் ஏற்கனவே பெறப்பட்ட விடுமுறை காலப் பகுதிக்குள் தீர்க்கப் படாதுவிட்டால் உரிய தினத்தில் கடமைக் குச் சமுகமளிக்க வேண்டியது கட்டாயம் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும், அரச ஊழியர்களின் வெளிநாட்டு விடுமுறை தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள சுற்று நிருபத்தை மீறும் நிறுவனங்களின் பிரதானிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொதுநிர்வாக அமைச்சு மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக் கது.

# நாட்டை நல்ல நிலையில் கொண்டு செல்ல சஜித்தை நாம் வெல்ல வைக்க வேண்டும்!

## இவ்வாறு தெரிவித்துள்ளார் ஹரீஸ் எம்.பி.

(நூருல் ஹுதா உமர் )

சிங்கள மக்கள் ரணிலுக்கு வாக்கு போட மாட்டோம் என்று முடிவெடுத்து விட்டார்கள். தென்பகுதியில் நடைபெற வேண்டிய கூட்டங்களை ரணில் விக் கிரமசிங்க தரப்பினர் ரத்து செய்து விட்டார்கள். அடுத்து அநுரகுமார. இந்த நாடு பொருளாதார நிலையில் சிக்குண்டி ருக்கும் வேளையில் வெளிநாடுகள் உதவிக்கு வர வேண்டும். எமக்கு ஆத ரவு வழங்க வேண்டும். எனவே வெளி நாட்டு தொடர்புகள் இல்லாத ஒருவர் தான் அனுரகுமார. அவர் நமக்கு வேண டாம். இந்த நாட்டில் ஊழல் ஒழிக்கப்பட வேண்டும். பிள்ளைகளுக்கு தொழில் வாய்ப்பு கிடைக்க வேண்டும். நாட்டை நல்ல நிலையில் கொண்டு செல்ல வேண்டும். ஆகவேதான் இப்படிப்பட்ட ஒரு தலைவராக இருக்கும் சஜித் பிரேம தாஸவை நாம் ஆதரிக்க வேண்டும்.

இவ்வாறு ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவரும், முன் னாள் இராஜாங்க அமைச்சரும் நாடாளு மன்ற உறுப்பினருமான எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார்.

“வெல்லும் சஜித்” தேர்தல் பரப்புரை கூட்டமொன்று ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஏற்பாட்டில் சாய்ந்தமருதில் ஞாயிற்றுக்கிழமை இரவு நடைபெற்றது. அங்கு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந் தும் அங்கு உரையாற்றிய அவர்,

சஜித் பிரேமதாஸவோடு நான்கு மணித்தியாலங்களுக்கு மேலாகப் பேசி ஒப்பந்தம் செய்து முஸ்லிம் சமூ கத்தை பாதுகாக்கும் ஒரு முடிவுக்கு பிறகு தான் நாங்கள் அவரை ஆதரிக் கின்றோம்.

ஒரு ஜனாதிபதியின் மகனாகவும், ஆறு வருடங்கள் வீடமைப்பு அமைச்ச ராகவும் இருந்திருக்கின்றார். தற்போது எதிர்க்கட்சித் தலைவராக இருக்கின்றார்.



அவர் ஜனாதிபதியானால் இந்த நாட்டை நல்ல நிலைக்கு கொண்டு வருவதற்கு பல நாடுகளுடன் பேசிக் கொண்டி ருக்கிறார்.

சாய்ந்தமருது, கல்முனை, சம்மாந் துறை போன்ற ஊர் மக்கள் வாக்க ளிக்கின்ற வாக்குகள் ரணில் விக்ரம சிங்கவை ஜனாதிபதியாக்க முடியாது. கண்டி கம்பஹா களுத்துறை கொழும்பு போன்ற இடங்களில் இருக்கின்ற மக்கள் தான் இவருக்கு வாக்களிக்க வேண்டும். சிங்கள மக்களும் சொல்கின்றார்கள் ரணிலுக்கு வாக்களிக்க மாட்டோம் என்று. காரணம் இவருடன் இருப்ப வர்கள் சரியில்லாதவர்கள் என்று. மறைந்த பெருந்தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம். அஸ்ரப் ஒரு ஜனாதிபதி தேர்தலில் சந்திரிகாவை வெல்ல வைத்தார். சென்ற முறை மைத்திரியை நாங்கள் வெல்ல வைத்தோம். கடந்த முறை சிங்கள மக்கள் ஒன்றிணைந்து கொடுங்கோல் ஆட்சிக் காரனை ஆட்சி கதிரையில் அமர்த்தினார்கள். ஆனால் இன்று தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் ஒற்றுமையாக, சந்தோஷமாக வாழ வேண்டி பொருத்தமான ஒருவரை தேடு கின்றார்கள்.

எதிர் வருகின்ற ஜனாதிபதி தேர்தல் என்பது மிக முக்கியமானது. இதுதான் இந்த நாட்டினுடைய ஆட்சியை மாற்றப் போவது. இந்த நாட்டில் கம்யூனிஷக் கட்சியாக ஜேவிபி உருவானது. 1989 ஆம் ஆண்டு இந்த நாட்டில் அப்பாவி சிங்களவர்கள் இவர்களின் செயலால் உயிரிழந்தார்கள். அந்த நேரம் இருந்த ஜேவிபி இப்போது தேசிய மக்கள் சக்தி யாக மாறி இருக்கின்றது.

இந்த நாட்டில் ரணிலுக்கு ஏன் வாக்களிக்க கூடாது என்றால், இந்த நாட்டில் அரகலயே இருந்த போது இந்த நாட்டை பொறுப்பெடுத்து பல வேலை கள் செய்தாலும் இதனை நெருக்கடிக்கு காரணமாக இருந்த அமைச்சர்களுடன் ரணில் ஒட்டிக் கொண்டிருக்கின்றார். ரணில் இவ்வளவு எம்.பிமாரையும் வைத்துக்கொண்டு ஜனாதிபதியாகலாம் என நம்பிக்கொண்டிருக்கின்றார்.– என்றார்.



# கல்முனை சுகாதார சேவைகள் பணிமனை மருந்துப் பொருள்களின் மதிப்பீட்டுப் பட்டறை

(அஸ்ஹர் இப்றாஹிம்)

சுகாதாரத் திணைக்களத்தின் மருத்துவ விநியோகப் பிரிவு 2025 ஆம் ஆண்டுக்கான மருந்துப் பொருள்களின் வருடாந்த மதிப்பீடுகளை தயாரிக்கும் பொருட்டு விழிப்புணர்வு பட்டறைகளை நடத்தி வருகின்றது.

அந்த வகையில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் 2025 ஆம் ஆண்டுக்கான மருந்துப் பொருள்களின் வருடாந்த மதிப்பீடுகளைத் தயாரிக்கும் விழிப்புணர்வு பட்டறை நிந்தவூர் பிரதேச சபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

பிராந்திய மருந்தாளர் திருமதி எஸ்.இந்திரகுமாரால் ஒருங்கிணைப்பு செய்யப்பட்ட குறித்த பட்டறை கல்முனை பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சீ.எம்.மாஹிறின் வரவேற்புரையுடன் ஆரம்பித்து வைக்கப் பட்டது.

இந்நிகழ்வில் வைத்திய அத்தியட்சகர்கள், கல்முனை பிராந்திய சுகாதார



நிறுவனங்களின் பொறுப்பு வைத்திய அதிகாரிகள், பல் வைத்தியர்கள் பிரதம மருந்தாளர்கள் மற்றும் பிராந்திய மருந்துக் களஞ்சியசாலை பொறுப் பதிகாரி, மருத்துவ ஆய்வுகூட உத்தி யோகத்தர்கள், மருந்து கலவையாளர்கள் என சுமார் 100 பேர் கலந்து கொண்டனர்.

இதன்போது மருந்து விநியோகப் பிரிவின் பணிப்பாளர் டாக்டர் டெடுனு டயஸ் சூம் தொழிநுட்பத்தினூடாக பங்கேற்று துல்லியமான மதிப்பீட்டின் முக்கியத்துவம் தொடர்பாக உரையாற்றினார்.

மருந்து விநியோகப் பிரிவின் எஸ்.ஏ.எஸ்.சந்திரப்பெரும ஆண்டு மதிப்பீட்டின் நோக்கம் தொடர்பாகவும், இஹ்ஜாஸ் ஸ்வஸ்தா அமைப்பில் மதிப்பீட்டிற்கான வழிகாட்டுதல்கள் தொடர்பாகவும் குறித்த நிகழ்வில் விரிவுரையாற்றினர்.

மருந்துப் பொருள்களின் வருடாந்த மதிப்பீட்டைத் தயாரிப்பதற்கான பட்டறை “ஸ்வஸ்தா” முறைமையின் கீழ் மாவட்ட ரீதியாக நடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ரணிலின் கரங்களை பலப்படுத்த வாருங்கள்!

## அழைப்பு விடுக்கிறார்கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ஜெமில்

(எம். எப். றிபாஸ்.)

சிறுபான்மை சமூகத்தின் பாதுகாப்பு, எதிர்கால இருப்பு என்பவற்றை கருத்தில் கொண்டு ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்ரமசிங்கவின் கரங்களை பலப்படுத்த மக்கள் முன்வர வேண்டு என கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ஏ.எம். ஜெமில் தெரிவித்துள்ளார்.

சாய்ந்தமருதிலுள்ள அவரது கட்சிக் காரியாலயத்தில் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அவர் தனது உரையில், கடந்த ஆண்டுகளில் மக்கள் எதிர் கொண்ட நெருக்கடிகளை மறந்து விடக் கூடாது. நாடு பொருளாதார ரீதியில் பின்னடைவை சந்தித்திருந்த வேளை நாட்டைப் பொறுப்பேற்க இங்கு போட்டியிடும் எந்த வேட்பாளர்களும் முன் வரவில்லை ஆனால் தற்போதைய ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க தனது அரசியல் அனுபவத்தைக்



கொண்டு மக்களுக்காக நாட்டைப் பொறுப்பேற்றார்.

இன்று இலங்கை மீண்டும் அபிவிருத்தி நோக்கிய பாதையில் பயணிப் பதற்கு ரணில் விக்கிரமசிங்கவே களம் அமைத்துக் கொடுத்தார் என்பதை அனைவரும் நினைத்துப் பார்க்க வேண்டும். சிறுபான்மை மக்களின் இருப்பை நிலைத்திருக்க செய்யக்கூடிய ஒரே தலைவராக ரணில் விக்கிரமசிங்க காணப்படுகிறார்.

எனவே கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழ், முஸ்லிம் மக்கள் எதிர் வரும் 21 ஆம் திகதி ஜனாதிபதி தேர்தலை சரியாக பயன்படுத்த வேண்டும்.


சிறுபான்மை மக்கள் இனவாத அரசியலால் பட்ட துன்பங்கள், துயரங்களை மறந்து விடக்கூடாது. இலங்கையில் இனக்கலவரம் கட்டவிழ்த்து விடப்பட்ட 1883 காலப் பகுதியில் ஜே.வி.பி. செய்த அட்டூழியங்களை மறந்து விடமுடியாது. அதேபோன்றுதான் ரணசிங்க பிரேமதாஸவின் ஆட்சிக் காலத்தை சற்று சிந்தித்துப் பாருங்கள் அவர் வழியில் வந்த சஜித் பிரேமதாஸவுக்கு வாக்களிக்குமாறு கூறுகின்றனர். அது சிறுபான்மை மக்களின் வாக்குகளை சூறையாடி சுயநலம் கருதி செயற்படுகின்ற இதரக் கட்சிகளின் தலைவர்களின் கருத்தாகும்.

எனவே மக்கள் சிந்தித்து தன்னலமற்ற அரசியல் அனபவமிக்க சாணக்கியம் நிறைந்த வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவின் கரங்களை பலப் படுத்த வேண்டிய காலத்தின் கட்டாயத் தேவையாகும்.- என்றார்.

# குற்றச்சாட்டு!

## தமிழ்நாட்டுக்கு நிதி மறுப்பு முதல்வர் ஸ்டாலின் கொதிப்பு




M.K.Stalin
@mkstalin

Denying funds to the best-performing states for refusing to bow to the #NEP, while generously rewarding those who are not delivering on the objectives – Is this how the Union BJP Government plans to promote quality education and equity?

I leave it to the wisdom of our nation and our people to decide!

@the_hindu

...magra Shiksha fund delay punishes role-model St...

Top rankers denied funds

...some cases, unwillingness to accept the National Education Policy in its entirety was also a reason.

The fees for students enrolled under the Right to Education depends on SSA funds. Salary delays for teachers have also been reported in these States. Owing to the financial burden, Kerala and Punjab relented and Delhi too may agree to the Centre's terms.

By delaying the funds, the Centre has penalised the States that are at the forefront of achieving the SSA's major objectives, such as bridging social and gender

...24 · 40.4K Views

"தேசிய கல்விக் கொள்கைக்கு அடிபணிய மறுத்தமைக்காக சிறப்பாகச் செயல்படும் மாநிலங்களுக்கு நிதி மறுக்கப்படுகிறது" என தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

மத்திய அரசின் சமக்ரா சிக்ஷா திட்டத்தில் தமிழகத்திற்கு நிதி தர மறுப்பதை சுட்டிக்காட்டியே முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இவ்வாறு கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் தமது எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் ,

"தேசிய கல்விக் கொள்கைக்கு அடிபணிய மறுத்தமைக்காகச் சிறப்பாகச் செயல்படும் மாநிலங்களுக்கு நிதி மறுப்பது, அதே நேரத்தில் இலக்குகளை நிறைவேற்றாதவர்களுக்குத் தாராளமாக வெகுமதி அளிப்பது – இதுதான் மத்திய பா.ஜ.க. அரசு தரமான கல்வி மற்றும் சமத்துவத்தை மேம்படுத்தும் முறையா?

நம் தேசம் மற்றும் மக்களின் முடிவுக்கே இதை விட்டுவிடுகிறேன்!" இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.



## பாகிஸ்தான்ஆக்கிரமிப்பு காஷ்மீரில் வசிப்பவர்கள்

# இந்தியா வரலாம்!

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் வசிப்போரை, வெளிநாட்டவர்களாகவே பாகிஸ்தான் கருதுகிறது. ஆனால், இந்தியா அப்படி நினைக்கவில்லை. அவர்களை சொந்த மக்களாகவே கருதுகிறது. அவர்கள் தாராளமாக இந்தியாவுக்கு வரலாம்" என்று ராஜ்நாத் சிங் கூறினார்.

யூனியன் பிரதேசமான ஜம்மு – காஷ்மீரில், எதிர்வரும் 18, 25 மற்றும் ஒக்டோபர் முதலாம் திகதிகளில் மூன்று கட்டங்களாக சட்ட சபைத் தேர்தல் நடைபெறவுள்ளது.

சிறப்பு அந்தஸ்து ரத்து செய்யப்பட்ட பின்னர் நடக்கும் முதல் தேர்தல் என்பதால், இந்தத் தேர்தல் முக்கியத்துவம் பெற்றுள்ளது. இந்தத் தேர்தலில் காங்கிரஸ் – தேசிய மாநாட்டு கட்சி இணைந்து போட்டியிடுகிறது. பா.ஜ.க., மக்கள் ஜனநாயக கட்சிகள் தனியாகத் தேர்தலைச் சந்திக்கின்றன.

சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு அனல் பறக்கும் பிரசாரத்தில் அரசியல் கட்சிகள் ஈடுபட்டுள்ளன. அதன்படி, ராம்பான் மாவட்டத்தில் நேற்று நடந்த பா.ஜ.க. பொதுக்கூட்டத்தில் அக்கட்சியின் மூத்த தலைவரும், பாதுகாப்புத் துறை அமைச்சருமான ராஜ்நாத் சிங் பேசுகையில்,

"2019 ஒகஸ்டில், ஜம்மு – காஷ்மீருக்கான சிறப்பு அந்தஸ்து ரத்து செய்யப்பட்ட பின்னர், அங்கு பாதுகாப்பு மேம்பட்டுள்ளது. இளைஞர்கள் தற்போது துப்பாக்கிகளுக்குப் பதிலாக மடிக்கணினிகளை எடுத்துச் செல்கின்றனர். பா.ஜ.க. தலைமையில் அரசு அமையும் பட்சத்தில், இதுவரை கண்டிராத வளர்ச்சியை ஜம்மு – காஷ்மீர் அடையும்.

இதைப் பார்த்து, பாகிஸ்தான் ஆக்கிரமிப்புக் காஷ்மீரில் வசிக்கும் மக்கள், 'நாங்கள் பாகிஸ்தானுடன் வாழ விரும்பவில்லை. இந்தியாவுக்குச் செல்கிறோம்" என்று சொல்லும் அளவுக்கு வளர்ச்சி அடையும். பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் வசிப்போரை, வெளிநாட்டவர்களாக, பாகிஸ்தான் நினைக்கிறது. ஆனால், இந்தியா அப்படி நினைக்கவில்லை. அவர்களை சொந்த மக்களாகவே கருதுகிறது. அவர்கள் தாராளமாக இந்தியாவுக்கு வரலாம்" – இவ்வாறு பேசினார்.



# நைஜீரியாவில் கோர விபத்து!

## லொறிகள் நேருக்கு நேர் மோதல்
## 48 பேர் சாவு; 50 பேர் படுகாயம்

நைஜீரியாவில் எரிபொருள் ஏற்றிச் சென்ற லொறி மீது மற்றொரு லொறி மோதியதில் 48 பேர் பலியாகியுள்ளனர். 50க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

மேற்கு ஆபிரிக்காவில் உள்ள நாடு நைஜீரியா. அந்நாட்டின் நைஜர் மாகாணம் அகெயி நகரில் உள்ள கடுகதி வீதியில் நேற்று எரிபொருள் ஏற்றிக் கொண்டு லொறி ஒன்று சென்றது.

அப்போது, வீதியின் எதிரே வேகமாக வந்த மற்றொரு லொறி எரிபொருள் ஏற்றிச்சென்ற லொறிமீது மோதி விபத்துக்குள்ளானது.

இந்தக் கோர விபத்தில் இரு லொறிகளும் வெடித்துச் சிதறின. இச்சம்பவத்தில் 48 பேர் உயிரிழந்தனர். மேலும், 50க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இந்த விபத்துக் குறித்து தகவலறிந்த தீயணைப்பு, மீட்புக்குழுவினர் மற்றும் பொலிஸார் சம்பவ இடத்திற்குச் சென்று, படுகாயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள வைத்தியசாலையில் சேர்த்தனர். இந்த விபத்துக்கான காரணம் குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# பொப் மீது தீவிரவாதத் தாக்குதல் முயற்சி; ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் ஏழு பேர் கைது

## தொழுகை நிகழ்வுகளை நிறுத்திவிட்டு பொப்பின் வருகையை தொலைக்காட்சிகள் ஒளிபரப்ப ஏற்பாடு செய்தமையால் கோபமாம்



இந்தோனேஷியப் பயணத்தின் போது பொப் பிரான்சிஸ் மீது தாக்குதல் நடத்தச் சதித் திட்டம் தீட்டிய ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என இந்தோனேஷிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆசிய-பசிபிக் நாடுகளுக்கு பொப் பிரான்சிஸ் 12 நாள்கள் பயணம் மேற்கொண்டுள்ளார். கடந்த 3ஆம் திகதி முதல் 6ஆம் திகதி வரை அவர் இந்தோனேஷியாவுக்குப் பயணம் செய்திருந்தார்.

அப்போது அவர் மீது தாக்குதல் நடத்த ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத அமைப்பைச் சேர்ந்த 7 பேர் திட்டமிட்டிருந்தனர் என இந்தோனேஷிய பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது.

இதையடுத்து கடந்த 2 மற்றும் 3ஆம் திகதிகளில் அவர்களை இந்தோனேஷிய பொலிஸார் கைது செய்தனர். இந்தோனேஷியாவின் போகர், பெகாஸி, மேற்கு சுமத்ரா மற்றும் பங்கா பெலிடங் தீவு ஆகிய பகுதிகளில் இந்தக் கைதுச் சம்பவங்கள் நடந்தன. அந்த அமைப்பின் ஒருவரின் வீட்டில் நடத்தப்பட்ட சோதனையில், வில்கள் மற்றும் அம்புகள், டிரோன், ஐ.எஸ்.ஐ.எஸ். பிரசார அறிக்கைகள் ஆகியவை இருந்தன.

அவர்களிடம் நடத்திய விசாரணையில், "ஜகார்த்தாவில் உள்ள இஸ்திக்லால் மசூதிக்கு போப் பிரான்சிஸ் வருகை தந்ததும், அவரது பயணத்தை முன்னிட்டு, அனைத்துத் தொலைக்காட்சிகளிலும், வழக்கமான தொழுகை நிகழ்ச்சிகளைத் தற்காலிகமாக நிறுத்திவிட்டு, பொப் பிரான்சிஸ் பயணத்தை நேரடியாக ஒளிபரப்பு செய்ய இந்தோனேஷிய அரசு வேண்டுகோள் விடுத்திருந்தமை கோபத்தை ஏற்படுத்தியது" எனத் தெரிவித்துள்ளனர்.

இந்தத் தாக்குதல் சதியை இந்தோனேஷிய பொலிஸின் தீவிரவாத தடுப்புப் பிரிவினர் முறியடித்துள்ளனர். பப்புவா நியூகினியாவுக்கு நேற்று சுற்றுப் பயணம் செய்த பொப் பிரான்சிஸ், இன்று கிழக்கு திமோர் செல்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

கனடா முரசு

பக்கங்கள் 07

திங்கட்கிழமை 09/09/2024

## மிரட்டல் விடுத்த யுவதி சிக்கினார்

ஒன்றாரியோ ஓஷாவாவில் பாடசாலையில் துப்பாக்கிச் சூடு நடத்தப் போவதாக சமூக ஊடகப் பதிவை வெளியிட்டு அச்சுறுத்தினார் என கூறப்படும் 18 வயது கல்லூரி மாணவி ஒருவர் 02




# நகைக் கடையைக் கொள்ளையிட்ட 3 டீன் ஏஜ் பையன்கள் பிடிபட்டனர்!

**கடந்த வெள்ளிக்கிழமையன்று கிச் சனர் நகைக் களஞ்சியத்தில் முகங்களை மூடி ஆயுதமேந்திக் கொள்ளையடித்த மூன்று பதின்ம வயதினர் கைது செய் யப்பட்டனர்.**

**சந்தேக நபர்களைப் பொதுமக்கள் மடக்கிப் பிடித்து அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு வரும் வரை தடுத்து வைத்தி ருந்த பின்னர் அதிகாரிகளிடம் கைய ளித்தனர்**

**மாலை 5 மணியளவில் ஹைலேண்ட் ஹில்ஸ் மோலிலிந்தக் கொள்ளை நடந்ததாகப் பலர் புகார் அளித்தனர். வெள்ளிக்கிழமை.**

**மூன்று ஆண்கள் நகைக் கடைக்குள் நுழைந்து, சுத்தியலால் காட்சி அறைக் கண்ணாடிகளை உடைத்து, நகைகளைத் அள்ளிச் சென்றனர் என வாட்டர்லூ பிராந்தியப் பொலிஸார் தெரிவித்தனர்.**

அவர்கள் ஓடிக்கொண்டிருந்தபோது பொதுமக்கள் அவர்களைப் பின் தொடர்ந்து துரத்திச் சென்றுவர்களை மடக்கினர். பொலிஸார் வந்து பொறுப் பேற்கும் வரை அவர்களை ஒரு வணிக வளாகத்தில் தடுத்து வைத்தி ருந்தனர்.

கொள்ளையடிக்கப்பட்ட தருணங் களின் வீடியோ செய்திகளுடன் பகி ரப்பட்டது.

மூன்று பேர் கருப்பு உடை அணிந்து, எம்.டி. ஜூவல்லர்ஸ் தங்க நகைக் கடைகளில் இருந்து கையில் சுத்தி யலுடன் ஓடுகிறமையை கமரா பதிவு காட்டுகிறது.

ஒரு தனிப்படம், மக்கள் அவர்களை தரையில் பிடித்து வைத்திருப்பதைக் காட்டுகிறது. இது பொலிஸாரால் பகிரப்பட்ட தகவலை உறுதிப்படுத் துகிறது.

முறையே 15 வயது, 16 வயது மற் றும் 18 வயதுடையவர்கள் மீது ஆயு தம் கொண்டு கொள்ளையடித்தல், குற்றம் புரிவதற்காக மாறுவேடமிட் டமை, ஆபத்தான நோக்கத்திற்காக ஆயுதம் வைத்திருந்தமை, 5,000 டொலருக்கு மேல் பெறுமதியான - குற்றத்தின் மூலம் பெறப்பட்ட - சொத்துக்களை வைத்திருந்தமை ஆகிய குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள் ளன என வாட்டர்லூ பொலிஸார் தெரிவித்தனர்.

கைதான மூவரும் பிராம்டனைச் சேர்ந்தவர்கள் எனவும் கூறப்பட்டது.

இந்தக் கொள்ளையர்களை ஏற்றிச் செல்வதற்காக திருடப்பட்ட வாகனம் ஒன்றுடன் காத்திருந்தவர் எனக் கூறப் படும் நான்காவது நபரை பொலிஸார் தொடர்ந்து தேடி வருகின்றனர்.






# எயார் கனடா பயணிகளுக்கு நேரத்துடன் வர அறிவுறுத்தல்

கனடாவின் முதல்நிலை விமான சேவை நிறுவனமான எயார் கனடா விமான சேவை தனது பயணிகளுக்கு விசேட அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

எயார் கனடா விமான சேவையை பயன்படுத்து பயன்படுத்தும் பயணிகள் வழமையை விடவும் முன்கூட்டியே விமான நிலையங்களுக்கு செல்லுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

விமானபம் புறப்படுவதற்கு முன்னதாக விமான நிலையத்திற்கு செல்லக்கூடிய ஆக குறைந்த நேரம் 60 நிமிடங்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே 45 நிமிடங்களுக்குள் பயணிகள் விமான நிலையத்திற்கு வருகை தர வேண்டும் என்ற அறிவிப்பு வழங்கப்பட்டிருந்தது.

தற்பொழுது இந்த அறிவிப்பு மேலும் பதினைந்து நிமிடங்களால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி வழமையை விடவும் பயணிகள் முன்கூட்டியே விமான நிலையத்திற்கு செல்ல வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பயணப் பொதிகளையும் பயணிகளின் ஆவணங்களையும் சரிபார்த்து சுமூகமான முறையில் பயணங்களை முன்னெடுப்பதற்காக இவ்வாறு முன்கூட்டியே பயணிகள் விமான நிலையத்திற்கு செல்வது அவசியமானது என அறிவுறுத்தல் வழங்கப்பட் டுள்ளது.

விமான நிலையத்தில் செக்இன் செய்துகொள்ள விரும்பும் பயணிகள் இவ்வாறு முன்கூட்டியே விமான நிலையத்திற்கு செல்ல வேண்டும் என அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

விமான பயணம் செய்யும் நேரத்திற்கு நான்கு மணித்தியாலத்திற்கு முன்னதாகவே பயண பொதிகளை ஒப்படைக்கப்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, எயார் கனடா விமான சேவையின் விமானிகள் தொழிற்சங்க போராட்டம் ஒன்றை முன்னெடுக்க உள்ளனர் என எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

## மிரட்டல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைது செய்யப்பட்டு அதற்கான குற்றச்சாட்டை எதிர்கொள்கிறார்.

மேற்படி ஸ்னாப்சாட் செய்தியை மவுண்டீஸ் இடைமறித்து அவர்கள் விவரித்ததன் பின்னர், கடந்த வியாழன் அன்று றோயல் கனேடியன் மவுண்டட் பொலிஸ் தங்களைத் தொடர்பு கொண்டதாக டர்ஹாம் பிராந்திய காவல்துறை கூறுகிறது.

ஓஷாவாவில் உள்ள ஒரு பள்ளியில் துப்பாக்கிச் சூட்டைத் தொடங்குவதற்கான தனது திட்டத்தை அந்த இடுகை சுட்டிக்காட்டியதாகக் காவல்துறை கூறுகிறது. இருப்பினும் அவர்கள் எந்தப் பள்ளிக்கூடம் என்பதைக் குறிப்பிடவில்லை.

அந்தப் பதிவை வெளியிட்ட 18 வயதான டர்ஹாம் கல்லூரி மாணவியைக் கண்டுபிடித்து, எந்தச் சம்பவமும் இல்லாமல் அவளை வளாகத்தில் வைத்துத் தாங்கள் கைது செய்தனர் எனப் புலனாய்வாளர்கள் கூறுகின்றனர்.




பின்னர் விட்பியில் உள்ள அவரது வீட்டை சோதனை செய்து, 18 துப்பாக்கிகள், ஐந்து ஏர்சாஃப்ட் துப்பாக்கிகள் மற்றும் 1,000 க்கும் மேற்பட்ட தோட்டாக்களைக் கைப்பற்றினர் எனறும் பொலிஸார் கூறுகின்றனர், இவை அனைத்தும் சட்டப்பூர்வமாக கையகப்படுத்தப்பட்டு சேமிக்கப்பட்டதாக அவர்கள் கூறுகிறார்கள்.

மிரட்டல் விடுத்த குற்றச்சாட்டை அந்தப் பெண் எதிர்கொள்கிறார்.




# ஈ - ஸ்கூட்டர் விபத்தில் உயிரிழந்த சிறுவனின் நினைவேந்தல் சனியன்று

கனடாவின் மொன்றியால் பகுதியில் ஈ-ஸ்கூட்டர் விபத்தில் பலியான பதின்ம வயதுடைய சிறுவனுடைய நினைவு உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

14 வயதான சிறுவன் ஒருவரே இந்த சம்பவத்தில் உயிரிழந்துள்ளான் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சிறுவனின் மறைவிற்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு அவன் விபத்தில் சிக்கிய மொன்றியால் பூங்காவை அண்டிய பகுதியில் நேற்று முன்தினம் சனியன்று நடைபெற்றது. தனது பிறந்த நாளுக்குப் பரிசாகக் கிடைத்த ஈ-ஸ்கூட்டரை செலுத்திய சமயம் வீதியில் வேகமாகச் சென்ற கார் ஒன்றுடன் மோதுண்டு படுகாயமுற்ற இச்சிறுவன் பின்னர் உயிரிழந்தான்.

மொன்றியாலின் காட்டர்வில் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. ஈ-ஸ்கூட்டர் பயன்படுத்தும் போது பாதுகாப்பான வழிமுறைகளை பின் பற்ற வேண்டும் என அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

# மாணவர்களை துஷ்பிரயோகம் செய்தாராம் போர்ட் ஹோப் பகுதியில் ஆசிரியை கைது

கனடாவில் ஒன்றாரியோ மாகாணத்தின் போர்ட் ஹோப் பகுதியில் ஆசிரியை ஒருவர் மாணவர்களை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.

தரம் எட்டில் கற்பிக்கும் ஆசிரியை ஒருவரை இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஆகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி இந்த சம்பவம் தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சென் அந்தனிஸ் கத்தோலிக்க பாடசாலையில் கற்பித்த 40 வயதான கெலி அண்ட் ஜெனிங்ஸ் என்ற ஆசிரியையே இவ்வாறு குற்றச் செயலில் ஈடுபட்டார் எனக் குற்றம் சுமத்தப்பட்டுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

அந்தப் பாடசாலையில் கற்ற மாணவர்களை ஆசிரியை பாலியல் ரீதியாக துஷ்பிரயோகம் செய்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பெண் ஆசிரியை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் ஒன்பதாம் திகதி நீதிமன்றத்தில் விசாரணைகளுக்காக முன்நிலையாவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் ஒரு முறைப்பாடு செய்யப்பட்டதாகவும் பின்னர் நடத்திய விசாரணைகளின் போது மேலும் மாணவர்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

இதன்படி குறித்த ஆசிரியைக்கு எதிராக 16 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. 16 வயதிற்கும் குறைந்த பாடசாலை மாணவர்கள் இவ்வாறு துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.





# பாடசாலைகளில் நல்ல பழக்கவழக்கங்களை பயிற்றுவிக்க கியூபெக் பிரதமர் வலியுறுத்தல்!

பாடசாலைகளில் அதிக மரியாதை, ஒழுக்கம் மற்றும் சிறந்த பழக்கவழக்கங்கள் பேணப்பட வேண்டும் என்று தனது கட்சியின் இளைஞர் பிரிவு வலியுறுத்தும் கோரிக்கையுடன் தான் உடன்படுகிறார் என கியூபெக் மாகாண பிரதமர் பிரான்சுவா லெகோல்ட் கூறுகிறார்.

பாடசாலைகளில் 'நாகரிக கலாச்சாரம்' உருவாக்கப்படுவதை நோக்கமாகக் கொண்டு நேற்று முன்தினம் சனிக்கிழமையன்று பல இயக்கங்களைச் சேர்ந்த சுமார் 150 பிரதிநிதிகள் பங்குபற்றிய மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்க.

இப்போது, லெகால்ட் தமது கல்வி மந்திரி பெர்னார்ட் ட்ரைன்வில்லேயிடம் பாடசாலைகளில் சிறந்த பழக்கவழக்கங்கள் பேணப்படுவதற்கான ஒரு திட்டத்தை முன்வைக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

மிகவும் முறையான மொழியில் மற்றவர்களுடன் உரையாடுதல், அனைத்து உயர்நிலைப் பள்ளிகளிலும் சீருடைகளைநடைமுறைப்படுத்துதல், கொடுமைப்படுத்துபவர்கள் மற்றும் வன்முறையில் ஈடுபடும் மாணவர்களுக்கு கடுமையான தண்டனைகளை விதித்தல், அத்துடன் அந்த நடத்தையை நிவர்த்தி செய்ய அந்த மாணவர்களுக்கும் அவர்களது பெற்றோர்களுக்கும் பயிற்சி அளிப்பது ஆகியவை உட்பட பல விடயங்கள் புதிய திட்டத்தில் அடங்கும் எனக் கூறப்படுகின்றது.







# சக மாணவிக்குத் தீவைத்த சிறுமியின் மீது கொலை முயற்சிக் குற்றம் சுமத்தப்படுகிறது

சாஸ்கடுனில் உள்ள ஈவான் ஹார்டி கல்லூரியில் 15 வயது வகுப்புத் தோழியைத் தீயில் கொளுத்தி கடுமையாகக் காயப்படுத்தினார் எனக் குற்றம் சாட்டப்பட்ட 14 வயது சிறுமி மீது கொலை முயற்சி, மோசமான தாக்குதல் மற்றும் தீ வைத்தல் ஆகிய குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

குற்றம் சாட்டப்பட்டவர் சிறுமி என்பதால், இளைஞர் குற்றவியல் நீதிச் சட்டத்தின் கீழ் அவரின் பெயர் விவரங்களை வெளியிட முடியாது என்பது குறிப்பிடத் தக்கது.

கடந்த வெள்ளிக்கிழமை காலை சாஸ்கடுன் மாகாண நீதிமன்றத்தில் நீதிபதி டக் அக்னியூ அந்தச் சிறுமியை நேரில் ஆஜராக்குமாறு உத்தரவிட்டார். சிறிது நேரம் நீதிமன்றத்தில் அச்சிறுமி முன்னிலைப்படுத்தப்பட்டபோது ஆஜரானபோது அவர் அழுது கொண்டிருந்தார். ஹூடி அணிந்து அழைத்து வரப்பட்ட அச்சிறுமியுடன் நீதிபதி உரையாடினார். செப்டம்பர் 11 ஆம் திகதி அவரை மீண்டும் ஆஜராக்கும் வரை காவலில் வைக்க உத்தரவிடப்பட்டது.

குற்றம் சாட்டப்பட்டவரின் பல குடும்ப உறுப்பினர்களும் நீதிமன்றத்தில் ஆஜராகினர். அவர்கள் சுருக்கமான நீதிமன்ற நடவடிக்கைகளின் போது அழுது கொண்டிருந்தனர். செய்தியாளர்களுடன் பேச அவர்கள் மறுத்துவிட்டனர்.

இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மாணவி வியாழக்கிழமை நண்பகல் தாக்குதலுக்குப் பிறகு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். அவர் ஆபத்தான நிலையில் இருக்கின்றார் என நம்பப்படுகிறது என்று சாஸ்கடுன் பொலிஸ் சேவை (எஸ்.பி.எஸ்.) வெள்ளிக்கிழமை செய்தி வெளியீட்டில் தெரிவித்துள்ளது. தொடர்ந்து விசாரணை நடத்தி வருவதாக எஸ்.பி.எஸ். குறிப்பிட்டது.

பாதிக்கப்பட்டவர் மற்றும் இவான் ஹார்டி சமூகத்திற்கு ஆதரவான பலகைகள், அத்துடன் டஜன் கணக்கான பூங்கொத்துகள் வெள்ளிக்கிழமை உயர்நிலைப் பள்ளிக்கு வெளியே வைக்கப்பட்டன.

இவான் ஹார்டி கல்லூரியில் உள்ள மாணவர்கள் மேற்படி தாக்குதல் சம்பவத்துக்குப் பிறகு வீட்டிற்கு அனுப்பப்பட்டனர். கடந்த வெள்ளிக்கிழமை வகுப்புகள் ரத்துச் செய்யப்பட்டன. இருப்பினும் மாணவர்கள் மற்றும் ஊழியர்களுக்கு ஆலோசனை சேவைகளை வழங்க பள்ளி திறந்திருந்தது. திங்கள்கிழமை சேவைகள் தொடரும் என்றும் செவ்வாய்கிழமை வகுப்புகள் மீண்டும் தொடங்கும் என்றும் அதிபர் கரேன் பீட்டர்சன் வெள்ளிக்கிழமை மாணவர்களின் குடும்பத்தினருக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.




# ஒன்றாரியோவில் தடைசெய்யப்பட்ட ஹைட்ரில்லா வேகமாகப் பரவுகிறது

ஒன்றாரியோவில் தடைசெய்யப்பட்டதும், வேகமாக வளர்ந்து ஆக்கிரமிப்புத் தாவரமமாக மாறக் கூடியதுமான ஹைட்ரில்லா ரகத் தாவரம் ஒன்று கனடாவில் முதன்முறையாக ஒன்ட்டின் லீமிங்டனில் உள்ள ஹில்மேன் மார்ஷ் பாதுகாப்புப் பகுதியில் பர்ந்து படர்ந்து வருவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த ஹைட்ரில்லா 7.5 மீட்டர் வரை வளரக்கூடியது.

எசெக்ஸ் பிராந்திய பாதுகாப்பு ஆணையம் (ERCA) வெளியிட்ட அறிவிப்பின்படி -

நீர் உள்ளெடுக்கும் குழாய்கள் மற்றும் படகுகளின் மோட்டார்கள் மற்றும் நீச்சல், துடுப்பு விளையாட்டுகள் போன்ற பிற பொழுதுபோக்கு நடவடிக்கைகளுக்கு இத்தாவரம் இடையூறு விளைவிக்கும்.

மேற்படி சதுப்பு நிலத்தின் மேற்குக் கலத்தை - பாதை மற்றும் போர்டுவாக் உட்பட - இத்தாவரம் மூடியுள்ளது.

படகு ப்ரொப்பல்லர்கள், கயாக்ஸ், கேனோக்கள், டிரெய்லர்கள், மீன்பிடித்தல் மற்றும் வேட்டையாடும் கியர், செல்லப்பிராணிகளுடன் ஒட்டிக் கொண்ட தாவரத் துண்டங்கள் மூலம் அல்லது மக்கள் கவனக்குறைவாக கொண்டு செல்லும் தாவரத் துண்டுகள் மூலம் புதிய பகுதிகளில் இத் தாவரம் எளிதில் பரவுகிறது எனக் கூறப்படுகின்றது.

“இந்தத் தாவரம் மிக வேகமாக பரவுகிறது. ஒரு நாளைக்கு 2.5 சென்டிமீட்டர் வளரும்,” என்று எசெக்ஸ் பிராந்திய பாதுகாப்பு ஆணையத் தலைமை நிர்வாக அதிகாரி டிம் பைர்ன் கூறினார்.

“நீங்கள் ஏறக்குறைய நின்று இந்தத் தாவரம் வளர்வதைக் கண்ணால் அவதானிக்கலாம். அந்த வகை உடலியல் மூலம், இது இயற்கை சூழலில் எதையும் விட முன்நிலை யில் இருக்கின்றது” - என்றார் அவர்.

வாட்டர்லூ பல்கலைக்கழகத்தின் இணை பேராசிரியரும், வாட்டர்லூ வெட்லேண்ட் ஆய்வகத்தின் இயக்குநருமான ரெபேக்கா ரூனி இந்தத் தாவரம் மிகவும் எளிதாகவும் வேகமாகவும் பரவுகிறது என்கிறார்.

ரூனி மற்றும் அவரது குழுவினர் முதலில் ஹில்மேன் மார்ஷில் இந்த ரக ஹைட்ரில்லாவை அடையாளம் கண்டனர்.

விதைகளை உற்பத்தி செய்வது மட்டுமல்ல,இது சிறிய கிழங்கு போன்ற அடிக்கிழங்குகள் மூலமாகவும், துரியன்கள் எனப்படும் நிலத்தடி மொட்டுகள் மூலமாகவும் பரவுகிறது.

“தாவர துண்டுகள் கூட புதிய தாவரங்களாக வளர முடியும்” என ரூனி கூறினார்.

“எனவே, நீங்கள் தாவரத்தை துண்டாக்கினால் அதன் வழியாக, அல்லது உங்கள் படகின் ப்ரொப்பல்லர் மூலமோ அல்லது இழுவை மீன்பிடி சாதனங்கள் மூலமோ அதனை துண்டுபட வைத்தால் அது ஆயிரம் புதிய தாவரங்களை உருவாக்கக் கூடும். பின்னர் அவை பரவக்கூடும்.” - என்றார் ரூனி.

ஹைட்ரில்லா ஆஸ்திரேலியா, ஆப்பிரிக்கா மற்றும் ஆசியாவின் சில பகுதிகளை பூர்வீகமாகக் கொண்டது என்றும் அவர் கூறினார்.





# பற்றி எரியும் காட்டுத் தீயால் காற்றின் தரம் பிரிட்டிஷ் கொலம்பியாவில் மிகவும் மோசம்

மத்திய மற்றும் வடக்கு பிரிட்டிஷ் கொலம்பியாப் பகுதிகளில் வசிப்பவர்களுக்கு மாகாணத்தின் உள்பகுதியில் எரியும் கட்டுப்பாட்டை மீறிய காட்டுத்தீயின் புகையால் ஏற்படும் மிக மோசமான காற்றின் தரம் குறித்து எச்சரிக்கப்பட்டுள்ளது.

சுற்றுச்சூழல் கனடாவின் கூற்றுப்படி, காற்றின் தர சுகாதாரக் குறியீட்டில் (AQHI) Quesnel எட்டு மதிப்பெண்களைப் பெற்றுள்ளது.

இந்தக் காற்று மாசுபாடு அங்கு வசிக்கும் மக்களுக்கும் அருகிலுள்ள பகுதிகளுக்கும் உடல்நல அபாயங்களை அதிகரித்திருப்பதை இது குறிக்கிறது.

"முடிந்தால் இந்த நிலைமைகளில் இருந்து விலகி இருப்பதே சிறந்த முன்னெச்சரிக்கையாக இருக்க வேண்டும்" என்று சுற்றுச்சூழல் கனடா வானிலை ஆய்வாளர் பிலிப்-அலைன் பெர்கெரோன் கூறினார்.

ஜூலை 19 ஆம் திகதி முதன்முதலில் கண்டுபிடிக்கப்பட்டதில் இருந்து 560 சதுர கிலோமீட்டர் அளவுக்கு இந்தத் தீ பரவியுள்ளது. ஊட்சா ஏரிக்கு தெற்கே 144 சதுர கிலோமீட்டர் தொலைவில் உள்ள மவுண்ட் வெல்ஸ் அருகில் தீ எரிகிறது.

# கனடாவில் பண வீக்கத்தினால் அதிக பாதிப்பு சிறுவர்களுக்கே?

## கருத்துக் கணிப்பில் தகவல்






கனடாவில் பண வீக்கம் காரணமாக அதிக அளவு பாதிப்புகளை சிறுவர்கள் எதிர்நோக்குகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் முன்னெடுக்கப்பட்ட கருத்துக்கணிப்பு ஒன்றின் மூலம் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

வட்டி வீதக் குறைப்பு அறிவிக்கப்பட்டு வரும் நிலையில் இந்த கருத்துக்கணிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

எவ்வாறெனினும் இன்னமும் பணவீக்கம் காரணமாக - குறிப்பாக வாழ்க்கைச் சொலவு அதிகரிப்பு காரணமாக - கனடிய குடும்பங்கள் பாதிப்புகளை எதிர்நோக்கி வருகின்றன எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதில் குறிப்பாக சிறுவர்கள் அதிக அளவு பண வீக்கம் காரணமாக ஏற்படக்கூடிய பிரச்சனைகளை உணர நேரிடவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஒகஸ்ட் மாதம் 23 திகதி முதல் 26 ஆம் திகதி வரையில் இது தொடர்பான ஆய்வு முன்னெடுக்கப்பட்டது.

பெரும் எண்ணிக்கையிலானவர்கள் - கருத்துக்கணிப்பில் பங்கேற்ற பெரும்பான்மையானவர்கள் - அவசர செலவுகளைத் தம்மால் ஈடு செய்வதற்கு முடியவில்லை எனத் தெரிவித்துள்ளனர்.




# வாட்டர்லூ பொலிஸாரிடம் சிக்கிய 200 துப்பாக்கிகள்

வாட்டர்லூவில் தொடங்கிய ஆயுத விசாரணையின் ஒரு பகுதியாக வாட்டர்லூ பிராந்திய பொலிஸார் 200 துப்பாக்கிகளைக் கைப்பற்றியுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு 7.20 மணியளவில் போக்குவரத்து விதிமீறலுக்காக வெபர் தெரு வடக்கு மற்றும் பிரிட்ஜ்போர்ட் சாலை கிழக்கு பகுதியில் ஒரு வாகனத்தை அதிகாரிகள் தடுத்து நிறுத்தினர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாரின் கூற்றுப்படி, போக்குவரத்து நிறுத்தத்தின் போது வாகனத்திற்குள் துப்பாக்கிகள் மற்றும் தோட்டாக்கள் இருப்பதை அதிகாரிகள் கவனித்துள்ளனர். Guelph ஐச் சேர்ந்த 39 வயதுடைய ஓட்டுநர் கைது செய்யப்பட்டார். வாகனத்தில் இருந்து 17 துப்பாக்கிகள் பறிமுதல் செய்யப்பட்டன.

ஆயுதத்தை கவனக்குறைவாகப் பயன்படுத்தினார் மற்றும் சட்ட விரோதமாக அவற்றைக் கொண்டு சென்றார் என அவர் குற்றம் சாட்டப்பட்டார்.

நடந்துகொண்டிருக்கும் அந்த விசாரணையின் ஒரு பகுதியாக, Guelph இல் சனிக்கிழமையன்று விக்டோரியா சாலை வடக்கில் உள்ள ஒரு வீட்டில் பொலிஸார் ஒரு தேடுதல் நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

“குற்றவியல் சட்டத்தின் பொதுப் பாதுகாப்பு விதிகளின் கீழ், முறையற்ற முறையில் சேமித்து வைக்கப்பட்டிருந்த 156 துப்பாக்கிகளையும் கூடுதலாக 60 துப்பாக்கிகளையும் புலனாய்வாளர்கள் கைப்பற்றினர். ஏராளமான வெடிமருந்துகள், மகசீன்கள் மற்றும் துப்பாக்கி பாகங்களும் கைப்பற்றப்பட்டன” என்று பொலிஸ் தரப்பு ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளது.

